ஸ்ரீ சுதேசமித்திரன்

9-11-47

விலை 4 அணா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JAN 1948
MADRAS

SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

யாரெல்லாம் ஆங்கிலம் கற்கலாம்

1. ஆங்கில எழுத்துகூடத் தெரியாத பெண்களுக்கும் ஆண்களுக்கும்
2. பாடசாலைகளில் சென்று பயிலமுடியாத குமரிகளுக்கும்
3. சிறிது கற்று நிறுத்தியவர்களுக்கும்
4. ஆங்கில படிப்பு இல்லாத குறையால் பிரமோஷன் கிடையாது வருந்தும் சர்க்கார் சேவகர்களுக்கும்
5. எஸ். எஸ். எல். ஸி. அல்லது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தோல்வியுற்று, காலேஜில் பிரவேசனம் இன்றி வருந்துபவர்களுக்கும்
6. பிரமோஷன் வேண்டுமென்று எண்ணுகிற ஆசிரியர்களுக்கும்
7. தவிர, எவர்க்கும் தத்தம் இல்லத்தில் இருந்தே தங்கள் வேலைகளுக்கு யாதொரு இடையூறுமின்றிக் குறைந்த காலத்தில் ஆங்கிலம் கற்கலாம். இன்று ஆங்கில எழுத்துகூடத்தெரியாத ஒருவருக்கு ஒரே வருடத்தில் நான்காவது பாரத்தின் ஆங்கில அறிவு பெறலாம்.

தொடர்ந்து மூன்று வருடங்கள் கற்பதாயின், கேம்பிரட்ஜ் ஸீனியர் என்னும் ஒரு பெரிய பரீட்சையில் தேறலாம். கல்வி பூராவும் தபால் மூலம் நடத்தப்படும். ஆங்கிலம் பயில விரும்புவோர், தான் படித்த வகுப்பையும் குறிப்பிட்டு கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதவும்.

கேம்பிரட்ஜ் காலேஜ், கைதமுக்கு, திருவனந்தபுரம்.

N. B. தங்களது குமாரர்களை விரைவில் கேம்பிரட்ஜ் ஸீனியர் பரீட்சையில் வெற்றியடையச்செய்து, இன்டர்மீடியட்டுக்குப் பிரவேசனம் செய்ய அரிய ஓர் வழியாகும்.

வாரியர்

பிருங்காமலகாதி தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப் படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம் : 1936)

ப்ரஸித்த ஜ்யோதிஷர்

சாஸ்திர ஆராய்ச்சியையும், நீண்ட கால அனுபவத்தையும் கொண்டு, வருங்காலப் பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும்.
மூன்று கேள்விகள் ரூ. 2.
ஒரு வருஷ பலன் (மாதவாரியாக) ரூ. 6.
ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2.
பொருத்தம் பார்க்க ரூ. 2.
(1) ஜாதகம் (2) பிறந்த மணி, தேதி (3) எழுதும் நேரம் இவைகளில் ஒன்று அனுப்பவும்.

Prof. ஸ்வாமி, M. A.,
தபால் பெட்டி 1403, மதராஸ் 17.

கண்ணில் பூவிழுதல்

டிகான்ஸ் ஐக்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க் கணக்கான பேர் ஆபரேஷனில்லாமல் சௌஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்தி பெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணு 12.

செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச் செவிடு, காதில் இரைச்சல், மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சௌஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதிபெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.

வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து பணத்தை மீதி செய்யலாம்!

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோகினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்குச் சிறந்த வாசனை எண்ணெயாகும். விலைகளோ மிகவும் குறைவு.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும் :

சாம்பாக்	ரூ. 2-0	கதம்பம்	ரூ. 1-8	ஹீனு	ரூ. 1-8	மோந்தியா	ரூ. 1-0
காஷ்	,, 2-0	மல்லிகை	,, 1-8	லில்லி	,, 1-0	ஸ்வீட்	,, 1-0
கேவ்டா	,, 2-0	ரோஸ்	,, 1-8	தாமரை	,, 1-0	மோதியா	,, 1-0
ஸக்	,, 2-0	போகுல்	,, 1-8	கோலோன்	,, 1-0	ஐடியல்	,, 1-0

அரை அவுன்ஸ் பாட்டில்களாகக் கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வி. பி. செலவு வேறு. இலவசமாக காட்லாக் அனுப்பப்படும்.

S PAUL & Co., Perfumers, (Dept. S.W.)
4. Hospital Street, Dharamtcla, Calcutta.

"தனலக்ஷ்மி புராடக்ட்ஸ்"

ரெடிமேட்
ஆடைகள்

4, ஜடாமுனி கோவில் தெரு,
மதுரை.

முக்கிய நகரங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

இளமை விருந்து

என்று சொல்லத்தகுந்த யுவர்களும், யுவதிகளும் விவாகம் ஆனவர்களும், ஆகாதவர்களும் படித்துப் பயன் பெறத்தக்க அரிய நூல்கள். இனிய தமிழ். எளிய நடை. திரு. வி. க. எழுதிய

பெண்ணின் பெருமை
அல்லது
வாழ்க்கைத் துணை
விலை. ரூ. 4—0—0

தமிழ்த் தென்றல்
அல்லது
தலைமைப் பொழிவு
விலை. ரூ. 5—0—0

பேரா. திருகூடசுந்தரம் எம். ஏ. பி. எல். இயற்றிய
விவாகமானவர்களுக்கு
ஒரு யோசனை
விலை. ரூ. 3—4—0
(இது மணவாழ்க்கையின் மர்மங்களும், தீங்கற்ற பல கர்ப்பத்தடை முறைகளும் உடையது)

அன்பு நூல் நிலையம்
132, பிராட்வே சென்னை-1

சூதகத்தை நிறுத்தியது

குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்தவல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3. நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5. மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ 8. கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4.

(வி. பி.க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F. D. S. (S. W)

Tollygunge :: CALCUTTA

ஸ்டாகிஸ்டுகள்: 1, ஹாரி & ஸன், 93, சைனாபஜார், மதராஸ், 2. ராகவன் & கோ, ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி. 3. K. C. மாத்யூ & கோ, கொழுஞ்சேரி, திருவாங்கூர் 4. J. திராத் & கோ, மகாத்மாகாந்தி ரோட், கராச்சி. 5. L. M. முகர்ஜீ & ஸன்ஸ் லிட், 167, தரம்டோலா தெரு, கல்கத்தா. 6, சிவானந்த சித்தர் மெடிகல் ஹால் 92. ஸீ தெரு, கொழும்பு. 768, லோயர் தெரு, பாதுல்லா (ஸிலோன்)

ராணியின் டானிக்-
டானிக்குகளின் ராணி

ஸ்திரீகளின் கர்ப்பாசய சம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் நிகரற்ற மேன்மையான அவுஷதம்

ரெஜினா மெட்ரோஜன்

விலை ரூ. 5. செலவு தன

லலிதாலயம் ஏஜன்ஸீஸ்,
பாபநாசம், தஞ்சை ஜில்லா.

கிடைக்குமிடம்:
T.N.C.நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ்
மதுரை.

மெடிகல் ஸ்டோர்ஸ்:
மேற்கு ரத வீதி,
திருநல்வேலி டவுன்

ஜே. பலாபாய் & கோ.,
260, சைனுப… மதராஸ்.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd.)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு ஸீ பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் … தி.

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.

ரீடா

அழகிய கேசத்தை
வளர்க்கிறது

ரீடா கேசத்தின் ஆரோக்கியத்திற்கான ஒரு புது வழி. கேசத்திற்கு இயற்கையான சத்துவத்தை மயிர்க்கால் வழியாக அளிக்கிறது. பொடுக்கைப் போக்கி வழுக்கையைத் தடுத்து அழகு வாய்ந்து நீண்டு பட்டைப்போல் பளபளப்புள்ள கேசத்தை வளர்க்கிறது. அந்தமில்லாத சிகைக்கு மேனி கொடுத்து அலைஅலையாக மயிர் உண்டாக்கும்.

ஒரு புட்டி ரீடா வாங்கி கேசத்திற்கு புது உயிரளித்து புது மேனியை உண்டாக்குங்கள். ரீடா எங்கும் கிடைக்கும். ஒரு புட்டியின் விலை 15 அணா.

RITA
HAIR TONIC

ஜாதகம்! ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:—1 முதல் 3. உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2.
3-க்குமேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5.
ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 2.
குறிப்பு:—வெளிநாட்டிற்கு இரட்டிப்புக் கட்டணம்.

சில - நற்சாட்சிகள்:

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ்:—"தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது."

ராவ்பகதூர் C. V. கிருஷ்ணஸ்வாமி B. A., ரிடையர்டு Dy. S. P. அண்டு அட்வகேட், உறையூர் கூறுவது:—ஜோதிஷ உலகில் இவரது சாஸ்திர ஞானமொழி இணையில்லாதது. இவர் கூறும் ஜாதக பலன்களைக் கேட்டவர், அவைகள் உண்மையாகவும், பூர்த்தியாகவும், ஆச்சரியமாகவும் இருப்பதை உணர்வதுடன் அவரை உண்மையில் இம்மை மறுமைக்கு வழித்தோழராகவும், ஆப்த நண்பராகவும் இருப்பதை அறிவார்.

Sri B. K. சதுர்வேதி - பார்-அட்-லா, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், ஸுரத்கார்-பிகானிர் ஸ்டேட்:—தங்களுடைய ஜோதிஷ பலன்கள் மிகவும் உண்மையாகவும், அதி ஆச்சரியமாயும் விளங்கின. தாங்கள் பெரிய ஸ்டேட் ஜோதிஷராய்-ராஜ் ஜோதிஷராய் பிரகாசிக்கத் திறமை வாய்ந்தவர்".

Sri E. J. இராஜரத்னம், சிலோன்-சிவில் ஸர்விஸ், கவர்ன்மெண்ட் ஏஜண்டு, களுடாரா, கொழும்பு, சிலோன்:—"தங்களுடைய ஜோதிஷ கணிதஞானத்தையும், பலன் கூறும் முறையையும் கண்டு மிகவும் மெச்சுகிறேன். இவ்வளவு ஆச்சரியமாயும், உண்மையாகவும். எதிர்கால பலன்களை கூறுவீர்கள் என்று நான் எண்ணவே இல்லை.

T.V. ஜெயராம சாஸ்திரிகள், ஆயுர்வேத பண்டிட் & ஜோதிஷ வித்வான்.
வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ, தெப்பக்குளம் P. O.
(தென் இந்தியா)

சக்தி ஆரூடம்!

புகழ்பெற்ற "சக்தி பால ஜோதிடரால்" வருங்கால பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும். அண்ணமலை யூனிவர் சிட்டி Prof. R. [illegible] M. A. 4-8-47-ல் எழுதுகிருர்:—"தங்கள் சாஸ்திர ஆராச்சியையும், தற்காலம், எதிர்காலம்பற்றி பலன்கள் கூறும் திறமையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்." 1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருஷ பலன் ரூ. 5. சக்திகவசம் ரூ. 7—8—0. வி. பி. பி. அணு 5. ஜாதகம் or எழுதும் நேரம் தேவை.

சக்தி ஆஸ்ரமம், விருத்தாசலம், P. O. (S. I)

KALAPI INDUSTRIES, BOMBAY, 2.

Sole Agents: KALAPI STORES, BOMBAY, 2.

தாருல் இஸ்லாம்

மாதம் ஒரு முறைத் தமிழ் இதழ்

✶

தமிழ் முஸ்லிம் உலகத்திலேயே தனிப்பெருஞ் சிறப்புடன் அரசியல் சமூகப் பொருளாதாரத் துறைகளில் அல்ஹாஜ் பா. தாவூத்ஷா சாஹிப் பி. ஏ., அவர்களை ஆசிரியராகக் கொண்டு கால் நூற்ருண்டு காலம் சிறந்த தொண்டாற்றிய சீரிய செந்தமிழ்ப் பத்திரிகை நாளது அக்டோபர் திங்களி லிருந்து மீண்டும் வெளி வருகிறது. முன்பணம் அனுப்பி சந்தா நேயராகச் சேருங்கள்.

✶

வருட சந்தா

இந்தியா, சிலோன் 4-8-0
பர்மா, மலேயா 6-0-0

மானேஜர்.

"தாருல் இஸ்லாம்"

30, சாந்தோம், சென்னை 4.

பொன் விழாவின் உதயம்



பண்டிட் டி. கோபாலாச்சாரியுலுவின்

ஜீவாம்ருதம்

வியாதியினுல் அவதிப்படும் மனித சமுகத்துக்கு சேவை புரிவதில் ஐம்பதாவது வருஷம் ஆரம்பமாகின்றது. என்றும் போல் இன்றும் ஜீவாம்ருதம் வியாதிக்குப் பின் குணம் பெறுவோர், பலஹீனர் அனைவருக்கும் உகந்த அருமையான டானிக்காக விளங்குகிறது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.

மதராஸ் 17

King Arrowroot

கிங் அரரூட்

குழந்தைகளுக்கும், வயோதிகர்களுக்கும் சிறந்த ஆகாரம் வைத்திய நிபுணர்களாலும், டாக்டர்களாலும் நன்மதிப்பு பெற்றது.

Sole Agents

EMPIRE TRADERS

4. BUNDER ST, MADRAS

வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் — வாழ்க நற்றமிழர்!

— வாரப்பதிப்பு —

Vol. XVIII] ஸர்வஜித்துஸ்ரீ புரட்டாசிமீ 12உ ✶ 1947-ஸ்ரீ செப்டம்பர்மீ 28உ [No. 35

ஜாபருல்லா சீற்றம்!

ஸர் ஜாபருல்லாகான் கடும் சினத்தோடு ஒரு பெரிய குண்டைத் தூக்கி இந்திய யூனியனில் விசிறி யெறிந்திருக்கிருர்! நாட்டில் நடைபெற்று வரும் மிருகப்பிராயமான செயல்களுக்கெல்லாம் இந்திய யூனியன் ஜவாப்தாரி போலவும், அங்குதான் முஸ்லிம்கள் வதைக்கப்படுவதுபோலவும் அவர் சாதிப்பது கண்டு மக்கள் பிரமிக்கின்றனர். இந்த விஷயம் குறித்து ஐக்கிய நாடுகள் சங்கத்துக்குப் பிரியாது செய்யப் போவதாகவும் அவர் சற்றும் தயங்காமல் எச்சரிக்கிருர். இதன் மூலம் நிவாரணம் கிடைக்காமல் போனுல் நேரடி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போவதாகப் பூச்சாண்டியும் காட்டியிருக்கிருர். ஜனுப் லியகத் அலிகானே கிழக்குப் பஞ்சாபில் அதிகாரிகளே முஸ்லிம்களை மடியச் செய்வதாகப் பிரகடனம் செய்கிருர்.

இதன் உண்மை என்னவென்று புதிதாக உணர்த்தத் தேவையில்லை. முஸ்லிம் லீக் விதைத்த விஷ வித்துகள் தான் இன்று நாட்டில் பேய்க்கோலம் கொண்டு தலை விரித்தாடுகிறது. மேற்குபஞ்சாபில் ஆட்சிபீடத்தை லீக் தலைவர்கள் வகுப்புப் பேயிடம் ஒப்படைத்து விட்டனர் என்பது தெளிவு. அங்கு நடக்கும் கோரங்கள் வெளியே தெரியாதிருக்க அவர்கள் தங்களாலானவரை திரை போட்டுப் பார்த்தனர். எனினும் ஏராளமான முஸ்லிமல்லாதார் அங்கு படுகொலைக்காளானதை அவர்கள் மறைக்க முடியவில்லை. லக்ஷக்கணக்கான ஹிந்துக்களும் சீக்கியரும் வீடு வாசல்களையும் மற்றெல்லாசொத்துக்களையும் விட்டுவிட்டு பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்து கொண்டிருக்கின்றனர். இவ்வளவு ஏராளமான ஜனங்கள் உயிருக்கஞ்சி அனுதைகளாக வெளியேறுவதொன்றே பாகிஸ்தான் நிலைமைக்குச் சான்று. பாகிஸ்தான் தலைவர்களுக்கு இந்திய சர்க்கார் அளித்துள்ள பதிலில் கிழக்கு பஞ்சாபிலும், டில்லியிலும் நடந்துள்ள கொடுமைகளை மறைக்கவில்லை. ஆனுல் அவை மேற்கு பஞ்சாப் அட்டூழியங்களின் பிரதிபலனே. அதற்கான பழி உண்மையில் முதலில் வகுப்புத் தீயை மூட்டிய கோஷ்டியையே சாரும்.

இந்தியாவைப்பொறுத்த வரையில் முஸ்லிம்கள் மீது எதிர் நடவடிக்கையைத் தடுப்பதில் இந்திய சர்க்கார் தங்கள் சக்தி முழுவதையும் உபயோகித்துவருவதுதெளிவு; இங்கு அமைதியும், ஒழுங்கும் நிலைக்கவும் இங்கிருந்து பாகிஸ்தான் செல்ல விரும்புவோரைப் பத்திரமாக அங்குகொண்டுபோய்ச் சேர்க்கவும் இந்திய சர்க்கார் முழு மூச்சுடன் உழைப்பது அனைவரும் அறிந்த விஷயம். இதே முறையில் பாகிஸ்தான் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாதது மட்டுமில்லை. அங்கிருந்து வெளியேறும் முஸ்லிம்களல்லாத அகதிகளை வதைப்பதில் மற்ற வகுப்பு வெறியர்களோடு பாகிஸ்தான் துருப்புகளும் ஒத்துழைக்கின்றன! அத்துருப்புகள் மேற்கு பஞ்சாபுக்குள்ளும் புகுந்து முஸ்லீம்களல்லாதார் பலரைக்கொன்று சொத்தைக் கொள்ளையிட்டதாக சமீபத்தில் செய்தி கிடைத்தது. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக தம் உயிரையே பணயமாகவைத்த காந்திஜியும் பொறுமை இழந்துவிட்டார். பஞ்சாப்மட்டுமின்றி எல்லைப்புறத்திலும்,

—அடுத்த பக்கம்.



காங்கிரஸைத் திருத்தியமைப்பது குறித்து மாகாணக் காங்கிரஸ் கமிட்டியினருடன் நேரில் கலந்து பேசுவதற்காக ஸ்ரீ சங்கரராவ் தேவ் சென்ற வாரம் சென்னைவந்திருந்தார். இக்கூட்டத்துக்கு ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களும் வந்திருந்தனர். கலந்துகொண்டவர்களோடு எடுத்த படம்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஸிந்திலும் நடக்கும் அட்டூழியங்களெல்லாம் இந்திய சர்க்கார் முற்றிலும் அறிந்தவையே. ஆனால் தற்போதைய நிலையில் அவற்றைப் பகிரங்கப்படுத்தி பாகிஸ்தான் சர்க்கார்மீது குற்றஞ்சாட்டுவது நிலைமையை இன்னும் கேவலமாக்கவே உதவுமென்று இந்திய சர்க்கார் கருதினர். இதைவிட இந்திய யூனியனில் அமைதியை நிலைநிறுத்துவதையும் அகதிகளை சம்ரட்சிப்பதையும் முக்கிய வேலைகளாகக் கொண்டு அவற்றில் ஒருமுகமாக ஈடுபட்டு வந்தது அவர்கள் மௌனத்துக்கு மற்றொரு காரணம்.

ஆனால் பாகிஸ்தான் தலைவர்கள் உண்மையை அடியோடு மறைத்து பழியனைத்தையும் இந்திய சர்க்கார்மீது சுமத்தத் துணிந்தபின் இந்திய சர்க்கார் இனியும் வாளாவிருந்து கொண்டிருப்பதற்கில்லை. எனவே தான் உண்மையை எடுத்துக் காட்டி ஓர் அறிக்கை வெளியிட்டனர். இவ்வுண்மையை வெளியுலகம் முழுவதும் அறியுமாறு அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வதும் அவசியம். ஏனெனில் லீக் தலைவர்கள் மற்ற பல துறைகளோடு பிரசாரத்திலும் பாஸிஸ்ட் முறையைக் கையாளக் கிளம்பியிருக்கின்றனர். பாகிஸ்தான் பிரதிநிதிகளில் ஒருவர் நியூயார்க் சென்று இந்திய சர்க்காரைத் தூற்றுவ[illegible] குறிப்பிடத்தக்கது. இந்திய சர்க்காரைக் கே[illegible]லப்படுத்துவதற்கான புரட்டுகள் அமெ[illegible]கப்பத்திரிகைகளில் இடம்பெற ஏற்பாடாகி யிருப்பதையும் நாம் அலட்சியம் செய்வதற்கில்லை. இத்தகைய புரட்டுப் பிரசாரத்தின் மூலம் உலகினர் கண்ணில் மண் தூவி விட முடியுமென்று பாகிஸ்தான் தலைவர்கள் மனப்பால் குடிக்கலாம். ஆனால் இந்திய சர்க்கார் அதற்குச் சிறிதும் இடங்கொடுக்கப் போவதில்லை. பாகிஸ்தான் தலைவர்களின் குற்றச் சாட்டுகளை பாரபட்சமற்றவர்களின் தீர்ப்புக்குவிட இந்திய சர்க்கார் முற்றிலும் தயார். ஏனெனில் பாகிஸ்தானைப்போல் இங்கு ஒளிக்கவேண்டியது ஒன்றுமில்லை. இந்த சமயத்தில் பாகிஸ்தான் சர்க்காரின் நடைமுறை யாதாயினும், இங்கு இங்கு அமைதியை நிலைநாட்டுவதிலோ முஸ்லீம்களல்லாதாரைப் போல. முஸ்லீம்களையும் காப்பதிலோ தங்களுக்குள்ள கடமையில் அவர்கள் சிறிதும் தவறமாட்டார்கள் என்பது திண்ணம்.



சத்தியம், அஹிம்ஸை இவை இரண்டைக்கொண்டும் இந்திய சுதந்திரத்தைச் சிருஷ்டி செய்த உத்தமர் மகாத்மாவின் ஜனன தினம் அக்டோபர் 2-ந் தேதி. அவருக்கு நீண்ட ஆயுளையும், நிறைந்த திடகாத்திரத்தையும் அளிக்கவேண்டுமென்பது நாட்டினர் பிரார்த்தனை.



அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்காக அனுப்பப்படும் சிறிய விமானங்கள் எல்லாம் பெரியதொரு விமானத்தில் ஏற்றி அனுப்புகிருர்கள். சீக்கிரத்தில் போய்ச் சேருவதற்காக இத்தகைய ஏற்பாடு.

பாரதியார் ஞாபகார்த்த நிதி

★

தமிழ்நாட்டுக் கவிச்சக்கரவர்த்தி ஸ்ரீ. சுப்பிரமண்ய பாரதியாருக்கு எட்டையபுரத்தில் ஞாபகச் சின்னமேற்படுத்துவதற்கான முயற்சி தீவிரமாக நடந்து வருகிறது.

அயர்ந்து கிடந்த மக்களைத் தேசிய வீறு கொண்டு எழும்படியான சக்தியைத் தமது தேசிய கீதங்களின் மூலம் திரட்டிக் கொடுத்த கவியரசர்பால் தமிழ் மக்கள் தங்கள் பக்தியைக் காட்டுவதற்குச் சிறந்ததொரு சந்தர்ப்பம் இப்போது வாய்த்திருக்கிறது. ஒவ்வொரு தமிழரும் இதற்கு உதவி புரிவர் என்பது திண்ணம்.

சென்னை ரெவின்யூ போர்டு ஸிவில் ஸப்ளை பொழுதுபோக்குச் சங்கத்தார் இந்த நிதிக்கு உதவும்பொருட்டு அக்டோபர் மாதம் 5-ந்தேதி ஞாயிறன்று மாலை 6-மணிக்கு மயிலை ரஸிக ரஞ்சனி சபையில் "மைதிலி" என்ற தமிழ் நாடகத்தை நடிக்கவிருக்கிருர்கள். நாடகத்தைப் பார்த்து களிக்கவும் நல்ல காரியத்துக்கு உதவி செய்யவும் இச் சந்தர்ப்பம் உதவுகிறது.



இரக்கம் என்ற ஓர் குணம். நம் இதயத்தில் இடம்பெற்றிருக்கிறது உண்மையானால், "தருமம் தலைகாக்கும்" என்ற முதுமொழிக்கு ஏதாவது பொருள் உண்டானால், அன்பு, தியாகம் என்ற பதங்களுக்கு அர்த்தம் உண்டானால், நியாயம், நீதி என்ற பதங்களுக்கு மக்கள் கூறும் அர்த்தம் யதார்த்தமேயானால், மனிதருக்குப் பகுத்தறிவு உண்டு என்பது சத்தியமானால், ஏழைகளுக்கு ஏனையோர் தயைபுரிவார்கள் என்று நாம் நம்பியிருப்பது வாஸ்தவமேயானால், பெண்களின் கண்ணீரும் பெரியோரின் கருணைவும் தக்க மதிப்பை அடைந்திருக்குமேயானால் இன்று கண்ணன் புலம்பவேண்டிய அவசியமில்லை.

* * * *

சேர்மாதேவி ஸ்டேஷனில் "பாய்ண்ட்ஸ் மேன்" ஆக வேலை பார்த்து வந்தான் கண்ணன். இன்று மூன்று வருடங்கள் ஆகின்றன. அன்று, அவனுக்கு 'ட்யூட்டி'. அவனுடைய வேலை வண்டி வரும்போது தண்டவாளங்களைத் தடைகளின்றி தயாராகவைத்திருக்கவேண்டியது. சாயந்திரம் 3 மணி இருக்கும். ட்ரெயின் ஸ்டேஷனை நெருங்குகிறது. வேலையில் கவனமாகவிருந்த அவன் திடீரென்று வண்டி வந்த திசையை நோக்கினான். அவனுடைய நெஞ்சம் திடுக்கிட்டது. மூளை குழம்பிவிட்டது. ஓர் சிறிய பையன் தண்டவாளங்களின் மேல் ஏறி விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டான். பதறி எழுந்து ஓடினான்.

வரப்போகும் ஆபத்தையும்; வருங்காலத்தில் தன்னுடைய கடமையையும்பற்றி கனவிலும் கவலை கொள்ளாது, தன்னையே மறந்து, விளையாடிக்கொண்டிருந்த அச் சிறிய பாலகனை, தனது இருகைகளாலும் தூக்கி தூரத்தில் வைத்தான். ஆனால், அந்தோ! அப் பச்சிளங்குழந்தையின் உயிரைக் காப்பாற்றியதன் பரிசாக அந்த உத்தமனின்மேல் அந்த ரயில் ஏறியது. ஆ! என்ற குரல்.

அடுத்த கணம் வண்டி நின்றது. ஊரிலுள்ளோர் பலரும், வண்டியின்பாலிருந்த அனைவரும் அவ்விடம் குழுமினர். இரத்த வெள்ளத்தில் சுருண்டு கிடந்தான் கண்ணன். பக்கத்தில் துண்டிக்கப்பட்ட இருகால்களின் துண்டங்களும் கிடந்தன. ஸ்மரணையற்றிருந்தான். ஆனாலும், அவனது அதரங்களில் வெற்றிப் புன்னகை தவழ்ந்து நின்றது.

ஆம்! ஓர் எதிர்காலச் செம்மல், வருங்காலம் பெரியோன், அல்லது தக்க காலத்தில் தகுந்த நீதிபதியாகப்போகும், ஓர் பாவமறியா பாலகனை, எமனுடன் போட்டியிட்டு, அவனுடைய வாயிலிருந்து விடுவித்து விட்டானல்லவா?

குழுமியிருந்த அனைவரும் வடித்த கண்ணீர் வெள்ளம், அந்த இரத்த வெள்ளத்தைவிட பிரமாதமாக இருந்தது. அப் பாலகனின் தாய், தன் குழந்தையை தன் மார்போடணைத்துக் கொண்டு, "பாலகா! உன்னைக் காப்பாற்றிய அந்த பரோபகாரிக்கு என் நன்றியைக் கூறக் கொடுத்து வைக்கவில்லையே என்று கதறினாள்.

கண்ணன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான். தகுந்த சிகிச்சைகள் நடந்தன. கடைசியில் குணமடைந்தான். ஆஸ்பத்திரியை விட்டும் வெளியேற்றப்பட்டான். ஆனால், இப்போது அவன் ஓர் நொண்டி. இரு கால்களையும் இழந்துவிட்டான். வேலை செய்ய முடியாது இனிமேல். அரசாங்கத்திற்கு விண்ணப்பம் விடுத்தான்.

காருண்யம் பொருந்திய அரசாங்கம், ஓர் வருஷம் கண்ணனையும் அவனை நம்பி உயிர் வாழ்ந்த 5 உயிர்களையும் (பெற்ருேர் மனைவி, இரு குழந்தைகள்) பட்டினியால் வாடவிட்டு, கடைசியில் இக்கண்ணியமான முடிவுக்கு வந்தது, இதுதான் கண்ணனின் தியாகத்திற்கு ஈயப்பட்ட பரிசு!

"ஓர் பாய்ண்ட்ஸ்மேனுடைய கடமை எப்பொழுதும் தண்டவாளங்களைத் தயாராக வைத்திருக்க வேண்டியது. ஆனால், கண்ணன், தனதுகடமையில் தவறினான். பின்னர் தண்டவாளத்தில் கண்ட அக் குழந்தையை காக்க முனைந்தான். அவன் செய்ய வேண்டிய கடமையைத்தான் செய்தான். ஆனால், கவலையீனத்தால் காலங் கடத்தி, கடைசி நேரத்தில் கடமையைச் செய்ததால் கஷ்டத்திற்குள்ளா

ஞன். இதற்கு ரயில்வே போர்டும் அரசாங்கமும் பொறுப்பல்ல என்று அரசாங்கம் அவனுக்கு ஆறுதல் கூறியது.

கேட்க வேண்டுமா கண்ணனின் துயரத்தை, சோகமே உரு வெடுத்து, கருவேப்பிலை மரம் போல் வளர்த்து வந்த ஒரே மகன் நொண்டியாயிருப்பதை நினைந்து நினைந்து மனம் நொந்திருக்கும் அவன் தாய்!

மகனின் ஆதரவால் சிலகாலம் ஓய்வெடுத்து இப்போது அவனது துர்அதிர்ஷ்ட நிலைமையால் தானே ஓர் குடும்பத்தை பொறுப்புடன் நடத்தவேண்டிய அவனுடைய வயோதிக தகப்பன்!

ஓர் காலத்தில் வீரமும், பராக்கிரமும் பொருந்திய ஒருவனை தன் கணவனாக அடைந்தமையால் பெருமை கொண்டு, இன்று இரு கால்களையும் இழந்து ஒருவருக்கும் பயனின்றி உயிருள்ள பிணமாக வீட்டில் கிடந்து சதா புலம்பும் நிலையில் புருஷனைக் காணும் அவன் மனைவி!

குழந்தைகளோ கேட்க வேண்டியதில்லை. ஏதோ, தெய்வாம்சம் பொருந்தியவைகளாய்த்தானிருக்க வேண்டும். புண்பட்ட நெஞ்சில் எண்ணெய் வார்த்து, ஆற்றும் சமயச் சஞ்சீவிகளாய்த்தான் விளங்கின. அவ்விரு குழந்தைகளும், தரித்திர திசையில், தயங்கி நின்ற அக்குடும்பத்தில், இன்பம் என்ற ஓர் சொல்லுக்கு உரிமை உண்டானால் அது அக்குழந்தைகளின் மழலைச் சொற்களால் தான்.

தெய்வம்என்று ஒன்று உண்டா' என்று சில சமயம் எண்ண ஆரம்பித்தான் கண்ணன்! தெய்வம் கொடுத்த உயிரை, தெரியாத்தனமாக இழக்கவிருந்த ஓர் குழந்தையை தக்க சமயத்தில் சென்று காப்பாற்றியமையால் தனது இரு கால்களையும் இழந்தான்.

குழந்தையைப் பெற்ற மாதாவின் குடல்பற்றி எரியும் என்று இரங்கிய அவன் கண்கள் முன் அவனைப்பெற்ற மாதாவே நின்று, குடல் எரிந்து ஏங்கி அழுகிருள்.

தன் உயிரையும் தியாகம் செய்யத் தயாராகவிருந்த அந்த வீரனுக்கு அரசாங்கம் கடமையில் தவறிய வீணன் என்ற பட்டத்தை ஈந்தது போலும்.

குழந்தைப் பருவமுதல் முடவனுகும் வரை எந்த ரயில்வேக்காக உழைத்து வந்தானே, இன்று அதே "ரயில்வே அவனுடைய வாழ்வை பாழ்படுத்தியது!

முதலாம் வகுப்பு வண்டியில், சுகமாகத் தூங்கி ஊர் சுற்றிவரும், ஓர் துரைக்கு ஓர் சிறிய காயம் பட்டால், அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுக்கிறது. ஆனால், கருமமே கண்ணுய், கடமையே கடவுளாய்க் கொண்ட இந்த ரயில்வே சிப்பந்திக்கோ அவன் உயிரே போய் விட்டாலும் "அவன் கடமை அது." கடமையைத்தான் செய்தான். இதிலென்ன பிரமாதம்? என்று கருணையுடன் கூறுகின்றது அரசாங்கம்.

* * * *

அந்த அரசாங்கம், நம்மை அடிமைபடுத்திய அரசாங்கம்.

இனிமேல் இருக்கும் சுதந்திர அரசாங்கமாவது, எங்களையும் ஆறறிவு படைத்த மனிதர்கள் தான் என்று பகுத்தறிவுடன் நோக்கி, தக்கவாறு சட்டங்கள் வகுத்து, எங்களையும் மானிட சமுதாயத்தின் ஒப்புயர்வற்ற மாணிக்கங்களாக்க பாடுபடுமா?

அன்று, எனது உடலிலிருந்து உதிர்ந்து ஓடிய இரத்தத்துளிகளும் அக்கொடுங்காட்சியை கண்ட அனைவரும் காட்டிய அனுதாபமும், இன்று கண்களிலிருந்து கசிந்து கன்னங்களின் வழியாய் ஆறு ஓடுமாறு, கவலையால் வாடி, அங்லாய்த்து நின்று, என் அன்னையும், என் மனைவியும் வடிக்கும் கண்ணீர் துளிகளும், பயனற்றவையா? இவற்றைக்கண்டாவது என்பால் இரங்குவார் யாருமில்லையா?" என்று கதறிக் கேட்கிருன் கண்ணன் கண்ணீருடன்.

"இந்த விட்டுக்காரனுேடே தொல்லை சஹிக்கப்படலே ஸார். நிலைமையெல்லாம் சரியாய், விலையெல்லாம் குறைஞ்சு, இரும்பு ஸிமிட்டிக்கெல்லாம் கண்ட்ரோல் போய், சீப்பா நல்ல இடத்தில் பஸ்ட் கிளாஸ் நிலம் கிடைச்சா, கச்சிதமா ஒரு விடு கட்டி. விடப்போறேன்...ஆமா..."

"அதுக்கு இப்போ பிடிச்சு என் கோட்டை கட்ட ஆரம்பிச்சிட்டேள்..."



வேண்டுமென்றேதான் தலைப்பு விளையாட்டாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நெற்றிக்கு பொட்டும், கழுத்துக்கு ஆபரணங்களும், கைகளுக்கு வளையல்களும் 'ரிஸ்டு வாட்சுகளும்', எப்படி அவசியமோ, அப்படியே கால்களுக்குப் பாதுகைகள் அவசியம். "நீரில்லா நெற்றி பாழ்" என்று சொன்னால், "பாதரட்சை இல்லா பாதம் பாழ்", என்று ஏன் சொல்லக்கூடாது? "செருப்பை"த்தான் நாம் வடமொழிச் சொல்லால் பாதரட்சை என்றும், பாதுகை என்றும் சொல்லுகிறோம். பாதரட்சையை பண்டைகாலம் முதற்கொண்டு மக்கள் உபயோகித்து வந்தனர் என்பதற்கு சரித்திரங்கள் வாயிலாகவும் புராணங்கள்மூலமாகவும் விளக்கு சான்றுகள் கிடைகின் கதவுக்கு ஸ்ரீராமபிரான் வீடு வாசல் முடிட்டும் மக்கள் சுற்றத்தார்களை கொஞ்சமும் மறந்து வனவாசம் நோக்கில், அவரது அருமை சகோதரர் ஸ்ரீபரதன் இவ்விஷயத்தை அறிந்து ஸ்ரீராமபிரானை அயோத்திக்குத் திரும்பி வர அழைக்க, அதற்கு ஸ்ரீராமபிரான் மறுக்க, பிறகு பரதன் ஸ்ரீராமபிரானுடைய பாதுகைகளை தலைமேல் தாங்கி நந்திக்கிராமத்தில் "பாதுகா பட்டாபிஷேகம்" செய்வித்தது 'இதிகாச' பிரசித்தமாயிற்றே!

இக்கட்டத்தில் பாதுகைகளின் பெருமை 'சிங்காதனம்' வரை சென்றிருப்பதை கவனிக்க! 'சிங்காதனத்தைவிட ஒரு மனிதனுக்கு வேறு என்ன வேண்டும்? ஆதலால்தான் 'செருப்பால் அடிப்பேன்' என்று சொல்பவனுக்கு ரூ. 50 அபராதமும்; 'செருப்பால் அடித்தவனுக்கு' ரூ 5 அபராதமும் விதிக்கிருர்கள்போலும்! ஆனால் ஜப்பானிலும் சீனவிலும் மக்கள் அதற்குக் கொடுக்கும் மதிப்பே அலாதி! அந்த நாட்டு மக்கள் தங்கள் பாதரட்சைகளை வாசற்படியில் கழற்றிவிட்டுத்தான் ஒருவர் வீட்டிற்குள் நுழைவார்கள். யார் வீட்டிலாவது வாசற்படியில் பாதரட்சைகள் இருக்கும்பட்சத்தில் யாரோ ஒருவர் வீட்டுக்குள்ளே சென்றிருக்கிருர் என்று தெரிந்துகொண்டு, உள்ளே சென்றவர் பாதரட்சைகளை (கால்களில்) மாட்டிக்கொண்டுவெளியே செல்லும்வரையில் வாசற்படியிலேயே உட்கார்ந்துகொண்டு சத்தியாக்ரகம் செய்வார்கள்!

எத்தனை பொதுக் கூட்டங்களில் பாதரட்சைகளை மேடைமீதெறியப்பட்டிருக்கின்றன! அவைகள் கூட்டத்தில் ஏலத்தில் விடப்படும்பொழுது 'நான் முந்தி, நீ முந்தி' என்று ஏலம் எடுப்பதில் எத்தனை அன்பர்கள் கலந்து கொண்டனர்!

சில அன்பர்கள், 'அவனுக்கு செருப்பால் சாத்துபடி செய்து அனுப்பினர்,' என்று சொல்லுவதற்கு சங்கோசப்பட்டுக் கொண்டு, "அவனுக்கு 'பாதுகா பட்டாபிஷேகம்' செய்து அனுப்பினர்," என்று இங்கிதமறிந்து கூறுகின்றனர். ஆனால் அது ஏழை என்றும், பணக்காரன் என்றும் பார்ப்பதில்லை. ஆண்டி முதல் அரசன் வரைக்கும் அது சேவை செய்கிறது, இல்லை, அதை ஆதரிக்கிருர்கள்.

நாம்தான் நேற்றைக்கு வாங்கின புது செருப்பை, கடற்கரையில் உலாவச் செல்லும்பொழுது, தவற விட்டு விட்டு ஆடு திருடின கள்ளன் போலவும், இஞ்சி தின்ற குரங்கு போலவும், நமது 'சகதர்மிணி'களிடத்தில் 'அசட்டுப் பிசட்டெ'ன்று நாம் நடந்து கொள்ளும் விதமே பார்க்க விநோதம்! நேற்று புது செருப்பு, இன்று பழையது இவ்வாறு சிலர் 'கோட்டை' விடுகின்றனர். நேற்று பழைய செருப்பு; இன்று புதியது இவ்வாறு அபேஸ் செய்கின்றனர் பலர்.

மழை காலம் வந்து விட்டால் பாதுகையின் பாச்சா பலிக்காது. ஆதலால்தான் ஒரு விடுகதைகூட தொன்றுதொட்டு இந்நாட்டில் வழங்கி வருகிறது "...குதிரை, தண்ணீரைக் கண்டால் தவிக்குமாம் குதிரை" வாசலில் போகும் பிச்சைக்காரன் ஒரு தடியில் இரு கிழிந்த செருப்புகளை தொங்கவிட்டுக்கொண்டு போகும் காட்சியை கண்ணுறக் கண்டதில்லையா? கழுத்தைச்சுற்றி பக்கத்து வீட்டுப் பயித்தியம், செருப்பை மாலையாகப் போட்டுக் கொள்ளும் காட்சி காணச்சகியாது! கால்களில் இரு செருப்புகளையும் மாட்டிக் கொண்டு நடக்க ஆரம்பித்தால் கேட்கவா வேண்டும்! காவதமானாலும் கவலையில்லையே. அப்புறம் நாம்தான் ராஜா, நமது சகோதரி 'காலேஜ் மாணவி போட்டுக் கொள்ளும் 'லேடீஸ் ஷூஸ்' போன்று இதில் தான் எத்தனை வகைகள்! செருப்பைக்கொண்டு ஒருவரின் அந்தஸ்தை மதிப்பிடலாம். 'துடைப்பக்கட்டைக்கு ஒரு பட்டுக் குஞ்சலமா' என்றுதானே கேள்விப்பட்டிருக்கிறீர்கள். பட்டுக் குஞ்சலம் உள்ள பாதரட்சையைப் பார்த்ததில்லையோ?

"பெண் என்ருல் பேயும் இரங்கும்" என்கிருர்கள். ஆனால் நேரில் பார்த்ததில்லை. ஆனால் நீங்கள் நடு ஜாமத்தில் செருப்பைக்காலில் மாட்டிக்கொண்டு கிளம்பினீர்களானால் பேய் உங்களை நெருங்க அஞ்சுமே! சாத்திரப் பிரசித்தி பெற்ற மகாத்மாவின் தண்டியாத்திரையும்ராஜாஜியின் வேதாரண்யம் யாத்திரையும் பாதரட்சை இல்லாமலா நடந்

ததுஃ வங்காளத்தில் எழுந்த வகுப்புக் கலவரங்களால் சிந்திய இரத்தத்தை புனிதமான பாதரட்சைகளால் மிதித்து பாபத்தைக் கட்டிக் கொள்ளக் கூடாதென்றே மகாத்மாகாந்தி வெறும் காலுடன் நவகாளியிலும். இப்பேராவிலும் யாத்திரை செய்தார். ஆதலால் பருப்பில்லாமல் கல்யாணமா என்பது போல், செருப்பில்லாமல் பிரயாணமா என்று சொல்லலாமல்லவா? புதுக் கட்டிடங்கள் எழுப்பினாலும் சரி, பயிர் பச்சைகள் வளர்த்தாலும் சரி திருஷ்டி பட்டுவிடக் கூடாதென்றே கிழிந்த செருப்பைத் தொங்க விடுகிறார்கள்.

"காலுக்காகாத செருப்பைக் கழற்றி எறி" என்று நாம் அதை அலட்சியம் செய்து 'காலை வாரிவிடாமல்'; அதனால் மனிதர்களின் வாழ்வு தாழ்வுகளை நிர்ணயம் செய்கிறோம் என்ற ஒரு காரணத்திற்காகவாவது அதை நாம் ஏன் கைதூக்கிவிடக் கூடாது? வேதாந்த தேசிகர் கூட "பாதுகா சகஸ்ரம்" என்று ஒரு ஆயிரம் ஸ்லோகங்கள் 'பாதுகை'களைப் பற்றி எழுதியிருக்கிறாரே வடமொழியில்! கோடை காலத்தில் சென்னையில் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு முன்னால் 'தார்'ரோட்டில் செருப்பில்லாமல் அவதிப்படும் அன்பர்களைப் பார்த்தாவது செருப்பின் அவசியத்தை உணர்வார்களாக! வாழ்க செருப்பின் உபயோ... கவச் ... அங் ... ன்று, ... ஙனை

"பாடகர் யரர்? காரைக்கால் கனகராஜன் இவர்தானு......"

"ஆமாம்! ஓங்க சபாலே இவர் கச்சேரி அரேன்ஜ் பண்ணப்போறேளா?......

"பண்ணலாம்னுதான் இருந்தேன். ஆனு இப்போ கேட்டப்புறம் அந்த ஐடியாவை அடியோடே விட்டுவிட்டேன் ஸார்......"

ஞாபகப்படுத்துகிறோம்

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.

"காய கல்பம்"

சகல ரஸங்களும் ஒருங்கு பொருந்திய இந்தப் புதிய தொடர் கதை விரைவில் ஆரம்பமாகும்.

—ஆசிரியர்.



ஆத்மகீதம்

ஜி.எஸ்.பி.

காரிருள் கப்பிய வானத்தில் மின்னல் வெள்ளிக் கோலம் போட்டது. குளிர் காற்று 'ஹோ ஹோ' என்று உத்வேகத்துடன் வீசியது. அர்த்த ராத்திரியில் வரப் போகும் பெரு மழைக்கான அறிகுறிகள் அஸ்தமித்த சிறிது நேரத்திலேயே ஸ்பஷ்டமாகத் தென்படலாயின. குளிர் உடலைக் கத்தி கொண்டு கீறியது...

மேட்டுப்பாளையம் மெயின் பஜாரில் அமளி வர வரக் குறைந்து கொண்டே வந்தது. உறங்கி விழும் கண்களுடன் விவசாயிகள் கதவுகளைப் பூட்டலாயினர்; பண முடிப்பைச் சரிப்படுத்தியபின், கொத்துச்சாவிகள் சகிதம் வீட்டை நோக்கி விரைந்து சென்றனர். பெரிய பெரிய மண்டிகளில் முதலாளிகள், கால்மேல் கால் போட்டு ...று நாள் பண மூட்டை வீங்குமா என்று ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தனர்.

தெருக்கோடியில் ஒரு ஹோட்டல். நாயர் ஹோட்டல் என்பதை வெளியே தொங்கும் வாழைப் பழங்கள் நிரூபித்தன. ஹோட்டலின் சொந்தக்காரனான நாராயணன் நாயர், பாலக்காட்டுத் தமிழில் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பஸ் கண்டக்டரிடம் பேசிக்கொண்டிருந்தார். ஏதோ நில சம்பந்தமான பேச்சுத்தான் நடந்து கொண்டிருந்தது. ஹோட்டல்களிலும், க்ஷவர ஷாப்புகளிலும் அணுகுண்டு முதல் அப்பளாம் வரையிலும், சுபாஷ் முதல் சுண்டைக்காய் வரையிலும், சர்வ விஷயங்களைப்பற்றியும் காரசாரமான விவாதங்கள் நடப்பது சகஜம்தானே?

வெளியே மின்சார விளக்குகளின் ஒளி நன்றாகச் சிதறாத ஓர் மூலையில் லட்சக்கணக்கான எச்சிலிலைகள் குவிந்து கிடந்தன. பக்கத்தில் எலும்பே உருவாய் நின்ற சுவானம், இந்தியாவின் எண்ணிறந்த ஏழைப் பிரஜைகளைப் போட்டிக்கிழுத்தது. மனிதர்களே ஒரு சாண் வயிற்றைக் கழுவப்படும் பாட்டில் 'ரோஸி,' 'ஜிம்மி' கதிகளே அதோகதியாய் இருக்கையில், அசல் சுதேசி நாய்களின் பாடு படு திண்டாட்டம் தானே?

அந்த நாய்க்குப் பக்கத்தில் நின்றது ஒரு கறுத்த உருவம்! ஆம்! பல வருடங்கள் அஸ்ஸாமில் கூலி வேலை செய்து, தேய்ந்து போன சரீரம் படைத்த ஏழை மகன். ஆழத்திலே ஒளிந்துகொண்டிருந்தன இரண்டு கண்கள், அவற்றில் ஒளியில்லை; உறக்கம்தானிருந்தது. ஒட்டி உலர்ந்து, காற்றில்லாத கால் பந்துபோல் மாறியிருந்த உதரப்பிரதேசம். ஆடையோ ஒரே கந்தல்! பசி வயிற்றைக் கிள்ளியது. கையிலே சிரித்தது தேய்ந்த ஓரணா! எந்த தர்மவானோ கொடுத்த செல்லாத காசு! ஒரு கப் 'டீ' சாப்பிடலாம் என்றால் முழுசாக இரண்டணா வேண்டும். ஆனால் இரண்டணா எங்கிருந்து குதிக்கும்? 'ஐயா! பிச்சைபோடு', என்று அவன் கேட்டால் முட்டாள் உலகம் அவனைப்பார்த்துச் சீறும்! 'தடியனுக்குப் போய் வேலை செய்வதற்கென்ன?' என்ற வார்த்தைகளும் தொடரும். யாசிக்கவே அவன் அஞ்சினான்.

வர்க்கியின் கண்களில் குலையாகத் தொங்கும் வாழைப் பழம் தென்பட்டது. தரித்திரம் காரணமாக உண்ணு விரதம் அனுஷ்டித்து வந்த அவன், அத்தனை பழங்களையும் கபளீகரம் செய்யத் தயாராக இருந்தான். ஆனால்?

கடைசியில் ஒருவிதமாகச் செல்லாத காசை நாயரிடம் தள்ளிவிட்டு, ஒரு வாழைப்பழம் வாங்கினான். தோலை உரித்து அதனை உள்ளே தள்ளினான். அந்தப்பழம், 'வாவா' என்று கூவி அழைத்த சண்டாள வயிற்றிற்குள் புகுந்தது. ஆனால் அடங்காத பசியைத் தணியச்செய்ததா? அதுதானில்லை!

யாரோ பேசிக்கொண்டார்கள். இருட்டில் நின்ற அவன் உள்ளே எட்டிப்பார்த்தான். நாயரும், நண்பரும் சுவரில் மாட்டியிருந்த சினிமா ஸ்டார் அஞ்சனாவைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள்.

"அற்புதமான நடிகை ஸார்! தமிழ் நாட்டிற்கே ஒரு அணிகலம்..." என்று அடுக்கினார் பஸ் கண்டக்டர். வர்க்கியின் அகத்தில் வர்ணிக்க முடியாத ஒரு உணர்ச்சி பாய்ந்தது. அந்தப்பட

மும், அதைத் தொடர்ந்து எழுந்த புகழ்மொழிகளும் அவனை அந்தரத்தில் பறக்க வைத்தன. அந்தப் படம் அவன் சகோதரியினுடையது. ஆம்! பூர்வாசிரமத்தில் அவனுடன் ரயிலில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்த சிறுமி அக்கம்மாதான்! தான் அஸ்ஸாமிற்குப்போன சிறிது காலத்திற்குள் இவ்வளவு பெயர் சம்பாதித்துவிட்டாளா? அடேயப்பா! பெயர் அஞ்சனுவாமே! அவனுடைய சகோதர வாஞ்சை கரை புரண்டோடியது!

"அவள் இறந்தது தமிழ் நாட்டின் பெரிய துரதிர்ஷ்டம் ஸார்! என்றுர் பஸ் கண்டக்டர். க்ஷயரோகமாமே! இந்தச் சினிமா சனியன்கள் எல்லாம் அதிலேதான் சாகிறதுகள்." என்று தனக்குத் தெரிந்த தமிழில் மனதில் உதித்த கருத்தை வெளியிட்டார் நாயர்.

'பளிச்'சென்று மின்னல் ஒளிகிறுகிறது. ஆனுல் தொடர்ந்து இடி கொட்டி முழக்குகிறது. இது உலகம்! தன் சகோதரியின் முன்னேற்றத்தை எண்ணி ஒரு கணம் மனங்களிப்பதற்கு முன் அவன் தலையில் பேரிடியென ஒரு செய்தி விழுந்தது. தமிழ் நாட்டுக்குப் பெரிய நஷ்டமாம்! அவனுக்கு? தன் உயிருக்குயிரான அக்கம்மா எப்படி உயிர் துறந்தாள் என்று அறியத்துடித்தது வர்க்கியின் உள்ளம். என் சகோதரி இறந்துவிட்டாளா என்று நாயர் முன் தோன்றி கேள்வி கேட்டான் அவன்.

"யாரப்பா உன் சகோதரி?"

"ஸ்ரீமதி அஞ்சனு! ஆம்! அவள் என் சகோதரி அக்கம்மாதான்! நாங்கள்......"

"பக்கத்தில் பைத்தியக்கார ஆஸ்பத்திரி எதுவுமில்லையோ?" என்று உள் அர்த்தம் வைத்துப் பேசினுர் முதலாளி.

"நிஜமாகவே சொல்லுகிறேன்! அவள் என் சொந்தச் சகோதரி..."

"போடா, என்று சொல்லிவிட்டு 'பஸ்' கண்டக்டர் பக்கத்திலிருந்த டீயில் கொஞ்சத்தை அந்த ஏழையின் மீது தெளித்தான்.

"வெளியே தொலே! உள்ளே வர இது ஒரு சாக்காக்கும்! வெட்டிப் பயல்கள் ஸார், கையிலே ஏதாவது அகப்பட்டால் கொண்டேபோய் விடுவார்கள்..." என்று சொல்லி வாயிலிருந்த தாம்பூலத்தை தாராளமாக வெளியே சென்றுகொண்டிருந்த எலும்புக்கூட்டின் முதுகில் 'சளீர்' என்று உமிழ்ந்தார்.

தன் தங்கை தனக்குச் சொந்தமே இல்லை என்று சொல்ல இந்த முட்டாள் உலகத்திற்கு உரிமையேது! ஒன்று சேர்ந்து பிச்சையெடுத்து வளர்ந்த கதை அதற்குத் தெரியுமா? தெரிந்தால் தான் நம்புமா!

மழை கொட்ட ஆரம்பித்தது!

சத்திரத்திற்குப் போவதற்குள் நன்ருகக் கந்தலாடை நனைந்துவிடும்! பக்கத்திலிருந்த கடைத் திண்ணையில் படுத்துறங்கத் தீர்மானித்தான் அவன். சிந்தனை, பந்தயக் குதிரையெனப் பறந்தது.

ரயில் வண்டிகளில் ஒரு சகோதரனும் சகோதரியும் பிச்சையெடுக்கும் காட்சி அவன் மானஸிகக் கண் முன் தோன்றியது. அவர்களுடைய வாழ்க்கைக் காட்சிகள் முழுதும் அவன் முன் தோன்றி ஜாலவித்தை காட்டின.

"அக்கம்மா! இனிமேல் இந்த வாழ்வுக்கு முற்றுப்புள்ளிதான் வைக்க வேண்டும். நேற்று வண்டியில் உன்னை ஒரு 'தாஞ' அடித்தானல்லவா?......நம் பக்கத்து ஊரில் சினிமா நட்சத்திரங்களைப் பொறுக்கி எடுக்கிருர்கள்! நாம் இரண்டு பேரும், வேறு பாதையில் இறங்குவோமா? நம்ம சொக்கப்பா பாகவதர் கூட முன்னுல் பிச்சைக்காரனுகத்தான் இருந்தாராம்! இன்னிக்கு அவரு லட்சப் பிரபுவாக இல்லே? என்ன, நான் சொல்றது?"

"நீ சொல்றபடி நடக்க நான் தயார்......"

ஆள் பொறுக்கி எடுக்கும் இடத்தை அடைந்தார்கள் அவர்கள். அக்கம்மாவை டைரக்டர் ஏற்றுக் கொள்வதாக வாக்களித்தார்! ஆனுல் ஒரு பெரிய நிபந்தனை! வர்க்கி அந்த ஊரை விட்டுப் போய்விட வேண்டும்! அவளைத் தன் சகோதரி என்று அவன் உரிமை கொண்டாடக் கூடாது! அழகி அக்கம்மாவை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனுல் ஏழை வாலிபனைக் கண்ணுக்குப் பிடிக்கவில்லை.

வர்க்கி நிபந்தனையை ஒப்புக்கொண்டான். தன் சகோதரியின் சுகமே அவனுக்கு மேலாகப்பட்டது. தன் வாழ்க்கை எப்படிப் போனுலென்ன?

சகோதரி தடுத்துப் பார்த்தாள். அவளிடம் விடை பெற்றுக்கொண்டு அவன் அஸ்ஸாம் சென்றுவிட்டான். அங்கு லட்சோப லட்சம் கூலிகளுக்குள் அவனும் ஒருவனுனன்.

'ஞான சோதரா, சங்கரா...' என்ற பாட்டு வர்க்கியின் காதில் விழுந்தது! யார் பாடுகிருர்கள்? குரல் தன் சகோதரியினுடையது போலல்லவா இருக்கிறது. தனது அந்தராத்மாவின் எதிரொலியா இது? இது ஆத்ம கீதமா? இல்லை, தன் சகோதரிதான் நிஜமாகவே பாடுகிருளா? சே! அவள்தான் உலகில் இல்லையே! ஆனுல் அந்த மணிக்குரல் அவளுடையதுதான்! முன்னெல்லாம், ரயில் வண்டியின் சக்கரங்களுடன் எழும் அதே நாதம்தான்! தான் தூங்குகிருேமா, கனவு காண்கிருேமோ என்று அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"ஏய்! இங்கே ஏம்பாபடுத்துத் தூங்கறே? நாளேக்கு கவர்னர் துரை வருரு...எழுந்திரு..." என்று அதட்டினுன் ஒரு போலீஸ்காரன்.

"நான் தூங்கவில்லையே......" என்று தடுமாறினுன் வர்க்கி. அவன் தூங்கினுனு? ஆனுல் மழை எப்பொழுது நின்றது?

பக்கத்தில் எங்கிருந்தோ...... சோதரா...என்ற பாட்டின் அடி மட்டும் காதில் விழுந்தது. தொடர்ந்து அருகிலிருந்த சினிமா கொட்டகையின் 'டிரம்' ஓசை கேட்டது. முதல் ஆட்டம் முடிந்துவிட்டது என்பது அவனுக்கு விளங்கியது. அவன் காதில் ஒலித்த கீதம், சினிமா கொட்டகையிலிருந்து எழுந்ததா? இல்லை: ஆத்மவீணையின் தந்திகளிலிருந்து தெறித்த 'கணீர்' நாதமா? அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"ஸ்ரீமதி அஞ்சனு நடித்த படம்! பாட்டுப்புத்தகம் காலணு......" என்று பக்கத்து சினிமா கொட்டகையிலிருந்து ஒரு குரல் எழுந்தது!



படத்தில் காணப்படுவதுபோன்ற ரயில்வே என்ஜின்கள் 4 அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவை விரைவில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அன்புள்ள அம்மாவுக்கு அலமு அநேக தண்டம் ஸமர்ப்பித்த விஞ்ஞாபனம்.

உணவு தான்யக் கொள்முதல் விஷயமாய் நம்ம பக்கங்களில் சர்க்கார் கையாளும் 'கெடுபிடியை'ப்பற்றி குறை கூறி எழுதியிருக்கிறாய். நானே இதுவிஷயமாய் உனக்கு எழுத வேண்டுமென்றிருந்தேன். எப்படியோ மறந்துபோய்விட்டேன். நல்லவேளையாக நீயே ஞாபகப்படுத்திவிட்டாய்.

இதுபற்றி கொஞ்சநேரத்துக்கு முன்புதான் இங்கே 'இவர்' வாஸு, கணக்கு வாத்தியார் இன்னும் சிலருக்கிடையே பெரிய சர்ச்சை நடைபெற்று ஓய்ந்தது. இந்த சந்தர்ப்பத்தில் வாஸுவின் பதிலைக் கேட்டு எல்லோரும் பிரமித்தே போய்விட்டார்கள். பிரமிப்பாவது, சமுத்திரம் மாதிரி, ஏதோ ஒரு பெரிய பிரச்னையைக் கிளப்பிவிட்டதாக நினைத்துக்கொண்டு, இரைந்துகொண்டு பேச ஆரம்பித்த கணக்கு வாத்தியார் பெட்டியில் அடங்கிய பாம்பு மாதிரி கப்சிப் என்று மேலே வாயைத் திறக்காமல் அடங்கி உட்கார்ந்து விட்டார். கணக்கு வாத்தியார் ஆரம்பித்தார்: "என்ன அக்ரமம் ஸார், அவனவன் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த தான்யத்தை அவனவன் இஷ்டப்படி சாப்பிட்டு விநியோகிக்க உரிமை இல்லையென்றால் இதைவிட வேறு என்ன அக்ரமம் வேண்டும்! பலாத்காரத்தை உபயோகப்படுத்தப்போவதாக சர்க்கார் சொல்லிவிட்டார்களே, வாஸ்தவந்தான். அவர்களிடம் போலீஸ், ராணுவம் எல்லாம் இருக்கிறது. நினைத்தால் 'உஸ்கோ' விட்டுவிடலாம். ஒத்துக்கொள்கிறேன். இந்தமாதிரி 'ஜபர்தஸ்தெல்லாம்' செய்தால் உற்பத்தி செய்கிறவர்கள் அடுத்த வருஷம் நிலத்தின்கிட்டே போவார்களா என்றுதான் கேட்கிறேன். நிலைமை இன்னும் மோசமாகவல்லவோ போய்விடும்?" என்று ஏதோ ஆவேசம் வந்தவர்போல் கூறினார்.

'உங்களிடம் இருக்கும் தான்யத்தை நீங்கள் ஒன்றும் இனாமாகக் கொடுத்துவிடவில்லை சர்க்காருக்கு. அதற்குரிய தொகை, போனஸ் 'ஈனஸ்' எல்லாம் வாங்கிக் கொண்டுதான் கொடுக்கிறீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பேசுங்கள்' என்றார் வாஸு. பணம் கொடுக்கிறார்கள், இல்லை என்று சொல்லவில்லை; பணம் தேவையுள்ளவர்களிடம் வாங்கிக்கொள்ளட்டும், பணம் தேவையில்லை. நான் என்னிஷ்டப்படி விநியோகித்துக் கொள்கிறேன் என்பவர்களிடம் எதற்காக பலாத்காரத்தை உபயோகப்படுத்த வேண்டும்?" என்றார் கணக்கு வாத்தியார். தேசத்தில் ஜனங்கள் பட்டினியால் செத்து மடிகிறார்கள். உம்முடைய இஷ்டமாவது? பஞ்சத்தில் ஜனங்களைக் காப்பாற்ற வேண்டியது சர்க்கார் பொறுப்பல்லவோ. பள்ளிக்கூடத்தில் பசங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் நீரே இப்படிக் கேட்டால், ஒன்றுந் தெரியாதவர்கள் என்ன சொல்லமாட்டார்கள்?' என்றார் வாஸு. 'சரி, நீங்கள் சொல்வதைச் சரியென்றே வைத்துக் கொள்வோம். மாகாணத்தில்தான் ஜனங்கள் இப்படி உணவுக்கில்லாமல் தவியாய்த் தவிக்கிறார்களே, பஞ்சாபிலிருந்து ஆயிரக்கணக்கில் அகதிகளை எதற்காக அழைத்துக் கொள்ள வேண்டும்?' என்றார் கணக்கு வாத்தியார். 'பூ! இவ்வளவுதானா? நீர் படித்தவர், எல்லாந் தெரிந்தவர் என்றல்லவோ நினைத்துக்கொண்டிருந்தேன்.' ஒன்றும் தெரியாதவர்கள் கேட்கும் கேள்வியையல்லவோ நீரும் கேட்க ஆரம்பித்து விட்டீர். பாவம்! உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்பட்டுத் தவித்துத் திண்டாடுகிறார்கள். அப்படிப்பட்ட ஆபத்தான சமயத்தில் அவர்களுக்கு யாதொரு உதவியும் அளிக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தால் என்ன ஆகும் தெரியுமோ? மதமாற்றந்தான் நடைபெறும். கனச்யாம்லாலும் ஜெயதேவ் சிங்கும் பண்டிட் நரஹரி சர்மா, ஷேக் மகம்மது, குலாம் ஹுஸேன், முகம்மது பாச்சாவாக ஆகிவிடுவார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் அநேகர் திருவாங்கூரிலும், மற்ற இடங்களிலும் இதர மதங்களைத் தழுவிய கதையாகத்தான் முடியும்.

அகதிகள் விஷயத்தில் சென்னை சர்க்கார் மேலும் தாராள மனப்பான்மை காட்டவேண்டும் என்றுதான் விவேகிகள் சொல்ல வேண்டிய வார்த்தை, என்று வாஸு கூறி முடித்தார். அவ்வளவுதான். யாரும் வாயைத் திறக்கவே இல்லை. 'கப்சிப்' என்று கூச்சல் அடங்கிவிட்டது.

உங்களிடம் இருக்கும் தானியத்தை நீங்கள் இனமாக கொடுத்துவிடவில்லை......"வாஸு'

இதென்ன, அரசியல் விஷயங்களில் இறங்கிவிட்டாயே என்று கேட்டுவிடாதே. உன்னுடைய கடிதத்துக்குத்தான் இதெல்லாம் மறைமுகமான பதில்.... 'மயிலே இறகு போடு போடு' என்று கேட்டால் அது போடுகிறதா? அதேமாதிரி இத்தனை தினங்களாய்ச் சர்க்கார் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். பெரிய பெரிய ஜமீன்தார்களும், மிராசுதார்களும் கள்ள மார்க்கெட் பேரத்தில் ஜரூராக இருந்தார்களேயொழிய ஏழை மக்கள் உணவுப் பொருளின்றி செத்து மடிவது அவர்கள் கண்ணில் கொஞ்சம்கூடப் படவில்லை. ஆகவேதான் பலாத்கார நடவடிக்கையில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இதை ஒரு பெரிய தப்பாக அங்கெல்லாம் சொல்கிறார்களென்று நீ எழுதியிருக்கிறாய். இதெல்லாம் தெரிந்திருந்தால் அவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள்.

ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் நீ எழுதியிருப்பது நியாயமாகத்தான் படுகிறது. அதாவது நம்மூரில் கொள் முதல் அதிகாரிகள் ஜனங்களிடமிருந்து ரூபாய்க்கு நெல் ஐந்தரை அல்லது ஐந்தே முக்கால் படியென்று பிடித்து அதையே நம்மூர் ரேஷன் கடையில் ரூபாய்க்கு மூன்றே முக்கால் படியென்று விற்பது சரியென்று சொல்லமுடியாது போல்தான் தோன்றுகிறது. அவர்களுடைய போக்குவரத்து வண்டி சத்தம் செலவையெல்லாம் கணக்குப் பார்த்துதானே விற்பனை செய்வார்கள் என்கிறார் வாஸு. 'எதற்காக வெளியே கொண்டுபோக வேண்டும்? அந்தந்த ஊருக்கு சப்ளை செய்ய வேண்டியதை அந்தந்த ஊர் ரேஷன் கடைகளில் போட்டுவிட்டு மிகுதியை வெளியே கொண்டு போவதற்கென்ன?' என்று நீ எழுதியிருப்பது கொஞ்சம் யோசிக்கக் கூடியதாகத்தான் இருக்கிறது.

......"பட்டு மாமிக்கு ஒரு வேளை காப்பி இல்லையென்றால்......"

சரி! நமக்கேன் வீண் வம்பெல்லாம். ஜனங்கள் பட்டினியால் கஷ்டப்படும்போது தான்யத்தை உள்ளே பதுக்கிக் கள்ள மார்க்கெட் பேரம் செய்வது சரியல்ல. அது மனுஷ்ய தர்மமுமில்லை. அவ்வளவுதான் நான் சொல்லமுடியும்.

வால் போச்சு கத்தி வந்தது என்கிற கதையாய், கொள் முதல் விஷயம் கொஞ்சம் திருப்தியளிக்கக் கூடியதாய் இருக்கிறதென்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் இதைவிட கவலைதரக் கூடிய இன்னொரு பெரிய நெருக்கடியல்லவோ ஏற்பட்டு ஜனங்களை பெரும் பீதிக்கு உள்ளாக்கிவிட்டிருக்கிறது. பயந்துவிடாதே. காப்பிக் கொட்டையைப்பற்றித்தான் சொல்கிறேன். இரண்டு வாரமாய் பட்டணமே அல்லோலகல்லோலப்படுகிறது. எங்கு பார்த்தாலும் ஒரே க்யூ. முன்பு மில் துணிகளுக்கு க்யூ நின்றதே ஞாபகம் இருக்கிறதா? அதே காட்சிதான் இப்பொழுது காப்பிக்கொட்டை விற்குமிடங்களில். எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்தக் காப்பி இல்லாமல் ஜனங்களால் ஒரு நிமிஷம் இருக்க முடியுமோ? நம்ம பக்கத்தகத்து பட்டு மாமியை எடுத்துக்கொள்ளேன். ஒரு வேளை காப்பி இல்லையென்றால் அவளுக்குத் தலைவலி, மயக்கம், இன்னும் சொல்லத்தெரியாத என்னவெல்லாமோ வந்துவிடுமே. அவ்வளவென்ன, எதிரகத்து ஏகாம்பரம் அய்யரை, நீங்கள் பொடிபோடுவதை விட்டு விடுகிறீர்களா? அல்லது காப்பி குடிப்பதை நிறுத்தி விடுகிறீர்களா?

இரண்டிலொன்று எதையாவது நிறுத்தியாக வேண்டும். உங்களுக்கு எது சம்மதம்? என்று கேட்டால் அவர் பொடியைத்தான் நிறுத்தச் சம்மதிப்பார் என்று நான் கண்டிப்பாகச் சொல்கிறேன். எழுந்திருக்கும் போதே ஜனங்கள் காப்பி முகத்தில்தானே விழிக்கிறார்கள்! சர்க்கரை இல்லையென்றால் வெல்லத்தைப் போட்டுச் சாப்பிடுகிறார்கள். வெல்லமும் இல்லையென்றால் வெறும் டிகாக்ஷனாவது சாப்பிடுவார்களே யொழிய அதை ஒருநிமிஷம் கூட நிறுத்த மாட்டார்கள். அப்படி வசப்பட்டு போயிருக்கும் அந்தக் காப்பிக் கொட்டை கிடைக்கவில்லையென்றால் எப்படித்தான் இருக்கும் நீயே யோசித்துப்பாரேன்.

நல்லதாயிற்று. ஒரு வீண் செலவு குறைந்தது ஜனங்களுக்கு என்றாள் மன்னி. அது தானே கிடையாது. ஒன்றுக்கு நாலு பங்கு செலவுதான் இதனால். கள்ளமார்க்கெட் எங்கே போயிற்று என்றார் வாஸு.



"அவர் பொடியை நிறுத்த சம்மதிப்பார்......"

அவர் சொல்வது கொஞ்சம் கூடப் பிசகில்லை. ஏதாவது ஒரு பொருளுக்கு நெருக்கடியென்றால் உடனே அது பாதாள பாலத்திலல்லவோ அடைக்கலம் புகுந்து விடுகிறது. கடையின் முன் பக்கத்தில் க்யூ, பின் பக்கத்தில், மூட்டை மூட்டையாக கள்ள மார்க்கெட் பேரம்!

டில்லியில் ரேஷன் கடைக்கு பிரதமர் பண்டித நேரு தாமே நேராகச் சென்று கடையில் இருந்த ஸ்டாக் முழுவதையும் வந்திருந்தவர்களுக்குக் கொடுக்கச் செய்து தமக்குள்ள ரேஷனையும் வாங்கிக் கொண்டார். எல்லா ஊரிலும் அந்த மாதிரி எதிர் பார்க்க முடியுமோ? எத்தனையோ அதிகாரிகளுக்கு ரேஷன் சாமான் வந்து ஆகவேண்டிய அவசியமில்லையென்றே சொல்லிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ரேஷன் கடைகளைப்பற்றி என்ன விசாரம்?

என்னமோ இதெல்லாம் எப்பொழுது ஒழிந்து ஜனங்கள் வேண்டிய பொருளை அலைச்சலின்றி வாங்கி நிர்விசாரமாய் இருக்கப் போகிறார்களோ? இருக்கிற நிலைமையைப் பார்த்தால் சமீபத்தில் அம்மாதிரியான ஒரு காலத்தை எதிர்பார்க்க முடியுமென்ற நம்பிக்கையே ஏற்படவில்லை.

இப்படிக்கு,
உன் அன்புள்ள
அலமு.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

(சந்தாவை முன்னதாக கட்டவேண்டும்.)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணா 4

3-மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்—"சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட் ரோடு, மதராஸ்.

எழுதும் அன்பர்களுக்கு

"மித்திரன்" வாரப் பதிப்புக்கு விஷயதானம் செய்பவர்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில், தெளிவாக எழுதியனுப்பவேண்டுமென்பதை மீண்டும் நினைப்பூட்டுகிறோம். ஏற்றுக்கொள்ளப்படாத கட்டுரைகளைத் திரும்பப்பெற விரும்புவர்கள் விலாசமிட்ட தபால் கவர்களையோ, தபால் தலைகளையோ சேர்த்தனுப்பவேண்டும்.

—ஆசிரியர்.

(கானடா)

'தினம் தினம் காலையில்
காப்பியே கிடைக்க வேணும்
சுஜானனா! காப்பியே கிடைக்கவேணும்.'

ஆதௌ. கீர்த்தனாரம்பத்திலே, பகவானானவர் சனகாதி முனிவர்களைப் பார்த்துச் சொல்கிறார்.

(பிலகரி)

'காப்பியைக் குடியுங்கள்—பிறகு
கடவுளை நினையுங்கள்-நீங்கள்' (காப்பியை)

அந்தப் பரம்பொருளும், சர்வவியாபியுமான சர்வேச்வரர் தன்னை நினைப்பதற்கு முன்பு காப்பியைக் குடியுங்கள் என்கிறார். இதிலிருந்து அந்தக் காப்பியானது பகவானையும்விட மேலானது என்று உள்ளங்கை ஜாங்கிரி மாதிரி தெரியவில்லையா? அவ்வளவு மகத்தான மதிப்பையும் கௌரவத்தையும் அடைந்துள்ள காப்பியின் புராணத்தைத்தான், ஏதோ என் அறிவிற்குத் தகுந்தாற்போல் சொல்லமுன் வந்துள்ளேன். அதில் ஏதேனும் குற்றம் குறை இருந்தால் காப்பிக்குப் பதிலாக கோக்கோ சாப்பிடுவதாக நினைத்துக்கொள்ளுங்கள். நன்றாக ரசிக்கக்கூடியதாயிருந்தால், கூட ஒரு கப் காப்பி குடித்ததுபோல் எண்ணிக்கொள்ளுங்கள்!

(மால்கோஸ்.)

காயமே இது பொய்யடா
காப்பிதானே மெய்யடா!

என்றார் ஒரு சித்தர். அவர் பெரும் காப்பி பக்தர். மெய்ப்பொருளும் அநாத ரட்சகனுமாகிய ஆண்டவனுடைய ஆதி அந்தமே நமக்குத் தெரியாதே? அப்படியிருக்கும் காலையில், அவனிலும் மேலான காப்பியின் ஆதி அந்தங்களை ஆராயப்புகுவது ரேஷன் கல்லில் அரிசியைப் பொறுக்குவதுபோல்தான்! இதுவரை யாரும் அந்த ஆராய்ச்சியை நடத்தியதாகத் தெரியவில்லை. கண்டோர் விண்டிலர், விண்டோர் கண்டிலர். நாமும் அதை முயற்சிசெய்யாமலே விலகிச் செல்வோம்.

காப்பியைக் குடிக்க வேண்டியதுதான் நம் கடமை. அது எப்படி உதித்தது என்றெல்லாம் மூளையைக் குழப்பிக்கொள்வதெல்லாம் நம் கடமையல்ல. இதை பகவானானவர் பார்த்தனுக்கு கீதோபதேசம் செய்தபோது அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

யுத்த அரங்கத்தில் அணி வகுத்து ஆயத்தமாய் நின்றுகொண்டிருந்த துரியோதனாதிகளைப் பார்த்து காண்டீபனானவன் கருத்திழந்து நிற்கிறான். கடிவாளத்தைக் கையில் பிடித்த கண்ணனோ விஜயா! விழிக்காதே! இதுதான் சமயம். பலமே தர்மம்! இந்த சந்தர்ப்பத்தைவிட்டுவிட்டாயோ மறு சமயம் வாய்ப்பதரிது. அப்புறம் சிவில் சூட்டும், பார்ட்டிஷன் வியவகாரங்களும் பெடரல் கோர்ட்வரை போய் நிற்கும். ஆகையால் இப்போதே கிரிமினல் ஆக்ஷன் எடுக்க வேண்டியதுதான் என்று உற்சாகமூட்டுகிறார். சோகம் கலந்த தொனியில் பார்த்திபனானவன் "பிரபோ! நான் கைவரிசையைக் காண்பிக்க அஞ்சவில்லை. அநேகமாக இந்த யுத்தம் பத்து பதினைந்து நாட்கள் நீடிக்கும். அத்தனை நாட்களும் இந்தப்போர்க்களத்திலே மோசமான 'வார் குவாலிட்டி' காப்பியைக் குடிக்கவேண்டி இருக்குமே என்று நினைக்கும்போதுதான் என் தலை சுற்றுகிறது என்கிறான். அப்போதுதான் தேவகி மைந்தனானவர் தெளிவாக எடுத்து உரைக்கிறார். "பார்த்திபா! காப்பியைக் குடிக்கவேண்டியதுதான் உன் கடமையே ஒழிய அதன் பலன்களை ஆராய்வது உன் வேலை அல்ல. பக்தர்களைக் காக்க நானிருக்க, பயமேன்? தலை சுற்றினால் அதற்கு மருந்து நான் தருகிறேன்" என்கிறார். அந்த மேற்கோளை நாமும் எடுத்துக்கொண்டு கூடியவரை ஆராய்ச்சி சேற்றில் காலைவிடாமல் இருப்போம்.

கவி, கபி, காப்பி, என்று வடமொழியில் அமரம் கூறுகிறது. கவியின் கற்பனையெழுச்சிகளில் கவிதாரசம் சொட்டுகிறது. கவிதா ரசத்தின் இனிமை காப்பியிலே காணப்படுகிறது. ஆகையால் காப்பி என்பது கவியின் உருபிலேயிருந்து வந்திருக்கலாம். அல்லது கவியென்பதே காப்பியின் மரபில் வரவும் பிரமேயமிருக்கிறது.

கபி, என்னும் வார்த்தை குரங்கைக் குறிக்கிறது. குரங்கு சுயேச்சையை விரும்பும் பிராணி. மனம் போன போக்குப்படி ஓடி ஆடி சாகும் ஜந்து. அதே போல் காப்பியைக் குடித்த உடன் மனது சுயேச்சை அடைகிறது. கற்பனை குதித்து ஓடுகிறது. ஆகவே காப்பி என்பது கபி என்னும் உறவிலிருந்தும் உண்டாகி இருக்கலாம்.

இவைகளெல்லாம் எப்படிப்போனாலும் காப்பிக்கும் காதலுக்கும் மிகவும் சம்பந்தம் உண்டு என்று புராண இதிகாச காலங்களிலிருந்தே நமக்கு நன்கு தெரியும். சிருங்காரரசம் ததும்பும் பாட்டுக்களையெல்லாம் அனேகமாக எந்த ராகத்தில் அமைக்கிறார்கள்? காப்பி ராகத்தில்தானே! ஆகவே காதலும் காப்பியும், கண்ட்ரோலும்—பிளாக்மார்க்கெட்டும் போல! இவைகளுடேயிருக்கும் அன்யோன்யம் சாமான்யப்பட்டதல்ல!

காதல் காவ்யத்தில் தலை சிறந்ததான சாகுந்தலத்தின் அடிப்படைத் தத்துவமே காப்பியில்தான் இருக்கிறது. காட்டு ரோஜாபோன்ற சகுந்தலை ஆசிரமத்தில் தயாரித்துக்கொடுத்த காப்பியைக் குடித்துவிட்டுத்தான், துஷ்யந்தன் அவளிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தான். உற்சாகமடைந்த அவன் உள்ளம் இனிய நாதரூபத்தில் வெளிப்படுகிறது. பாடுகிறான்.

(காபி)

காப்பி என்று சொல்லும் போதினிலே இன்ப
காதல் பிறக்குது நெஞ்சினிலே.

மகாகவி காளிதாசன் இந்த சம்பவத்தை நானூறு சுலோகங்களில் வெகு அழகாக வர்ணித்திருக்கிறான். சாகுந்தலத்தில் அவைகளைக் காணோமா? அதைத்தானே தெரிவிக்க வேண்டும்! அந்த கட்டத்தை ஒரே மூச்சில் எழுதி வைத்துவிட்டு கவியானவன் தடாகத்திற்கு ஸ்நானத்திற்குப் போயிருந்தான். சமையல் வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு சற்று சிரம பரிகாரம் செய்துகொள்ள நினைத்த காளிதாசனின் மனைவி கண்களில் அந்த ஏடுகள் தட்டுப்பட்டன. எடுத்து வாசித்துப் பார்த்தாள். அவளுக்கு ரௌத்திராகாரமான கோபம் வந்தது. ஏன் தெரியுமா? மிஸஸ் காளிதாசனுக்கு அவ்வளவாக காப்பி போடுவதில் கைராசி போதாது. அநேக டாக்டர் நண்பர்களுடைய கைராசி போல, 'ஆப்பரேஷன் வெற்றி ஆனால் ஆசாமிதான் காலி' என்ற தினுசு. காப்பிப் பொடியும் பாலும் செலவாவதில் குறைவு ஒன்றும் இல்லை. ஆனால் காப்பியில் ருசி இருக்காது. ஆகவே, தன் கணவன், சகுந்தலையின் காப்பி போடும் திறமையை வர்ணித்திருப்பதை வாசித்ததும் பொறாமை தலைக்கேறியது. காளிதாசன் தன்னை சுட்டிக்காட்டி கேலிபண்ணுவதாக எண்ணிக் கொண்டாள். அந்தக் கோபத்திலே அந்த நானூறு ஸ்லோகங்களையும் "சூர்யாய இதன் நம: அக்னயேஸ்வாஹா" என்று ஆஹுதி செய்து விட்டாள். இப்போது கூட எத்தனையோ வனிதா ரத்தினங்கள், கணவன் சிரமப்பட்டு எழுதி வைத்திருக்கும் கதை கட்டுரை, நாவல்களை, பழைய பேப்பர்காரனிடம் போட்டு விடுவதில்லையா? அதுபோல்தான்!

காதல் ரசம் இருக்கட்டும். சோகரசத்தை எடுத்துக் கொள்வோம். கம்பநாட்டாழ்வார் என்ன சொல்கிறார்? கடைசி நாள் யுத்தத்திலே, சுற்றார், உற்றார் எல்லோரையும் இழந்து, மனம் நொந்து, ராமனை எதிர்த்துப் போராட நிற்கும் ராவணன் நிலையை வர்ணிக்கிறார் அவர்.

(ஆனந்த பைரவி)

காப்பியில்லா காலை போல
கலங்கினான் இலங்கை வேந்தன்

என்றார். ஆஹா ஹா! என்ன அபூர்வமான இயற்கையான கற்பனை. காப்பியில்லாவிட்டால் ஆத்மாவின் வேதனை எம்மட்டும் செல்லும் என்று எவ்வளவு அழகாக விளக்குகிறார்! அப்புறம் வந்த யாரோ கடன்கார ஆராய்ச்சிக்காரர்கள் இடைச்செருகல் செய்து,

கடன் பட்டார் நெஞ்சம் போல
கலங்கினான் இலங்கை வேந்தன்.

என்று வம்புத்தனம் செய்திருக்கிறார்கள். கம்பனின் சொற் சித்திரம் காப்பியின் கண்யத்தை எவ்வாறு உயர்த்துகிறது பார்த்தீர்களா?

புராண இதிகாச காலங்களிலிருந்து தற்காலத்திற்கு வருவோம்.

காலையில் எழுந்திரு
காப்பியைக் குடி.

என்ற மூதுரை வாக்கியங்கள் நம் வாழ்க்கையின் மேற்கோளாகி விட்டிருக்கின்றன. நம், தினசரி வாழ்க்கை என்னும் ரயிலுக்கு காப்பி என்னும் தண்டவாளம் மிக்க அவசியம்.

ஒருநாள் காப்பி இல்லையோ அன்று ரயில் டிரெயில்தான்! ஆக்ஸிடெண்டுகளும், காஷுவாலிட்டிகளும் தான். தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்.

காப்பி ஹோட்டலில்லா ஊரில்
கால்வைக்கவேண்டாம்

என்று. அதற்கும் ஆபத்துவரப் பார்க்கிறது இப்போது. மோட்டார்காரிலிருந்து முருங்கைக்காய் வரை, திடீர் திடீரென்று பொது உடமைக் காரர்கள் மாதிரி அண்டர் கிரவுண்டிலே போய்விடுகிறதே! அந்த அண்டர்கிரவுண்ட் ஜுரம் இப்போது காப்பிக்கும் லேசாக அடிக்க ஆரம்பித்திருக்கிறது. களைப்புடன் கிளப்பிற்குள் நுழைந்தால் 'காப்பி இல்லை" என்ற போர்டு கண்களை உறுத்துகிறது. அந்தக் காப்பி இல்லாத ஹோட்டல் என்ன லக்ஷணமாக இருக்கிறது தெரியுமா? பவுடர் போட்டுக் கொள்ளாத சினிமா ஸ்டார் முகம் மாதிரி இருக்கிறது.

(கானடா)

காப்பி இல்லா ஹோட்டலுக்கோர் அழகுமில்லை
டிகுடித்துப்போவார்க்கு தேஜஸ் இல்லை,

என்று சும்மாவா சொன்னார் ஒரு ரசிகர்.

ஆழ்வாராதிகள் நாயன்மார்கள் எல்லோரும், எப்படி மனமுருக பக்தி பிரவாகத்தில் மூழ்கி இருந்தார்கள்? எந்த சக்தி அவர்களுக்கு அந்த வலிமையைக் கொடுத்தது? காப்பியின் மகத்தான சக்திதான் அதற்குக்காரணம்! காப்பியைக் குடித்தார், கடவுளைக் கண்டார்!

(கர்நாடக தேவகாந்தாரி)

எப்படிக் குடித்தனரோ—அடியார்
அப்படிக்குடிக்க நான்—ஆசைகொண்டேன்
சிவனே! (எப்படி)

இந்த மாயாலோகத்திலிருந்தும், ஆசாபாசங்களிலிருந்தும், பாசவ்ய, சம்சார சாகர துக்கங்களிலிருந்தும், சிறிது நேரமாவது நம்மை விடுவித்து, காமக்குரோத லோபமதமாத்சர்யாதிகளிலிருந்து நம்மை சற்றுவது விடுதலை செய்வது அந்த காப்பி பானம்—அமிர்தத்தையும்விட விசேஷமான அந்த பானம் ஒன்றுதான்.

(ஹிந்தி டியூன்)

கண்டதுண்டோ காப்பிபோல்—புவியில்
கண்டதுண்டோ காப்பி போல—போல—போல
புவியில்— (கண்ட)

சம்சாரத்தை பிசாசுமாதிரி அறையவேண்டும் என்று கோபாக்கிராந்தராய் உட்கார்ந்திருப்பீர்கள். அவள் கையில் ஒரு கப் காப்பியோடு வந்தால் அவள் கன்னத்தில் அன்பொழுகத் தடவிக்கொடுப்பீர்கள். ஆபீசில், துரை, நாக்கில் நரம்பில்லாமல் திட்டியிருப்பான். அவன் தலையில்போட உடனே ஓர் அணுகுண்டு தேவையென்று அமெரிக்காவிற்கு அப்பீல் செய்வீர்கள். ஆனால் மறு விநாடியில் ஒரு கப் காப்பி உள்ளே போனதும் மறுபடியும் துரையிடம் லக்ஷார்ச்சனையைப் பெற்றுக்கொள்ள கைகட்டி வாய்புதைத்து நிற்பீர்கள்.

காப்பி நம் வாழ்க்கையின் வழிகாட்டி. பலத்த டிராபிக்கின் நடுவிலுள்ள பீட் கான்ஸ்டேபிள்போல! அப்படிப்பட்ட காப்பிக்கு இப்போது பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப்பஞ்சம் நல்ல சூசகமல்ல! உலகில் அநியாயம் அதிகரிப்பதற்கு அடையாளம் இதுதான். ஆஸ்திக நாஸ்திகர் அனைவரும் ஒன்று சேர்ந்து, யக்யஹோமங்கள் நடத்தவேண்டும். பகவானிடம் டெபுடேஷன் போகவேண்டும். காப்பிக்கொட்டை சேகரிப்பதற்காக தனி மந்திரி நியமிக்கவேண்டும் என்று கிளர்ச்சி செய்யவேண்டும். தடங்கலில்லாமல் காப்பி கொடுக்கும் ஹோட்டல்களுக்கு தகுந்த போனஸ் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். தற்கால நிலைமையை மனமுருக ஓர் பக்தர் எடுத்துரைக்கிறார்.

[பைரவி]

உண்ணவோ உணவுமில்லை, குடிக்கவோ காப்பி [யில்லை
அண்ணலே சேயன்பேரில் கருணையே [காட்டிடாயோ
கோபமோ இந்தக் குறைசொல்லும் ஏழைமேல்
குகா, ஷண்முகா! குமரேச கந்தவேளே!

காப்பி புராணத்தை இதோடு நிறுத்திக்கொள்கிறேன். அதிகமாகச் சொல்லி, காப்பி பக்தர்கள், ஆர்வத்தைக் கிளப்பிவிட்டால் அப்புறம் ஆபத்தில் முடியும். ஆகவே, இந்தக் காப்பியோபாக்கியானத்தை கேட்டவருக்கும் கேட்டவரைப் பார்த்தவருக்கும், இம்மையிலும், மறுமையிலும், என்றைக்கும் காப்பி தவறாமல் கிடைக்கும். ஒரு வார்த்தை! அடியேனுக்கு எதுவும் சம்பாவனை செலுத்த நினைப்பவர்கள், காசாக, தேங்காய் மூடியாக, அழுகல் வாழைப் பழமாகக் கொடுக்காமல் யதாசக்திப் பிரகாரம் காப்பிக்கொட்டையாகக் கொடுக்கும்படி விக்ஞாபித்துக் கொள்கிறேன். காப்பியோபாக்கியானம் செய்தும் அடுத்தவேலைக் காப்பிக்கு வழி செய்யாமல் வீட்டிற்குப்போனால் என் சகதர்மிணி நரசிம்மாவதாரம் எடுத்துவிடுவாள்.

ராஜீவ நயனதியாக..............
நீ நாமரூபமுனகு—நித்யஜய மங்களம்.

இந்திய ரப்பர் போர்டு கூட்டம்



சென்ற 4ந் தேதியன்று டில்லியில் இந்திய ரப்பர் போர்டு கூட்டம் நடந்தது. தொழில், ஸப்ளை மந்திரி டாக்டர் முகர்ஜி இப்போர்டின் வேலைகளைப்பற்றி விளக்கிப் பேசுகிறார். சென்னைப் பிரதம மந்திரியும் இங்கு பிரசன்னமாயிருந்தார்.



சென்றவாரம் சென்னைக் கார்ப்பொரேஷன் அளித்த உபசாரப்பத்திரத்துக்கு ஸ்ரீ சரத் சந்திரபோஸ் பதிலளிக்கிறார்.

உபசாரப்பத்திரம் அளிக்கப்பட்டபின் ஸ்ரீ சரத்பாபு, மேயர், ஸ்ரீ பிரகாசம் முதலியோர்களுடன் எடுத்த படம்.

அபலையின் பிரார்த்தனை

தமிழ்நாடு
199480
சென்னை-600 0

1. கந்தல் திரையே! காரிருள் நிசியே!
காவிரி நதியே! காரிகை அபலை;
பொங்கும் இளமைப் புத்தெழில் போர்த்துப்
பொலியும் பருவம் எய்தியவுடனே,
எங்கும் பெற்றோர் வரனைத் தேடி
எதுவுந் தீரா தேக்கம் உற்றனர்;
அங்கும் இங்கும் பற்பல பேசினர்;
அண்டை அயலார் அனைவரும் ஏசினர்!

2. கொஞ்சிடும் மழலைக் குழந்தை வயதில்
குளிர்ந்தே உள்ளம் குலவினர் பெற்றோர்;
விஞ்சிடும் வனப்பு; வீசிளந் தென்றல்;
விரைந்திடுங் காலம்; விழுமிய பெண்மை;
நஞ்சுடன அமுதை நளினம் பின்னும்
நயன மிரண்டும் நனைந்தன நீரால்;
ஞ்சகள் பற்பலர்-பழமையின் புழுக்கள்
பார்த்தெனை மறுத்தனர், பணத்தின் பித்தால்!

3. எழுத்தறி விப்பவர் எந்தை பேதை
ஏய்க்கப்பட்டே ஏழ்மையில் உழல்பவர்;
கழுத்தை அமுக்கும் கவலைப் பாரம்
காரிகை என்றால் கலக்கம் துயரம்;
உழைத்துடல கெட்டு, உறக்கம் இன்றி,
உளைந்திடும் நெஞ்சில் உறுதியுந்தளர,
மழைத்துளி காணா மாநிலம் போலே
மகிழ்ச்சி வறண்டது மகளாம் என்றால்!

4. சுமையின் பளுவால் சுருண்டனர் பெற்றோர்;
சுட்டுப் பொசுக்கும் வறுமை வெயிலாம்!
தமையும் சிதையோ தருத்துடற் பெண்மை ?
கோழைகள் சமூகம் தூறிடும் லட்சியம்:
உமையே! தாயே! உலகம் போதும்
உயிரைத் தந்தென, உனதடி தஞ்சம்!
அமைதி நல வாழ்வை அடையப்பெற்றிலே;
அணைந்தருள் செய்வாய்! அம்மா, சரணம்!!



சிதம்பரம் ஸ்ரீ நடராஜா டெக்னிகல் இன்ஸ்டிடியூட்டின் வெள்ளிவிழா சமீபத்தில் கொண்டாடப்பட்ட போது எடுத்த படம்.

★

வில்லியம் பாஸ்கல் என்ற நியூ லண்டன் பண்ணைக்காரர் கையில் வைத்துக் கொண்டிருக்கும் இப்பசுவின் கன்று பிறந்தவுடன் 8 பவுண்டு எடைதானிருந்ததாம்! இது ரொம்பச் சின்னதாகவும், எடை குறைவாகவும் இருப்பதற்கான இதன் தாய் இதற்குப் பால் கொடுக்க மறுத்துவிட்டதாம். சாதாரணமாக பிறந்தவுடன் ஒரு கன்றின் எடை 130 பவுண்ட் இருக்க வேண்டுமாம் எடை அதிகரிக்க இதற்கு இப்போது பிரத்யேக ஆகாரம் கொடுக்கிறார்களாம்.

★

10

போலித்தொண்டும் உண்மைத்தொண்டும்

★

தேசபக்தவீரர்களான வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகிய இருவர்மீதும் 'நன்னடத்தை' ஜாமீன் வழக்கு, திருநெல்வேலி ஜில்லா மாஜிஸ்திரேட் விஞ்சு துரைமுன் நடைபெற்றது. அப்போது மாணுக்கர்களாகிய எங்களில் சிலர், "விஞ்சு துரைபோன்ற அன்னியரல்லவா நன்னடைத்தைக்கு ஜாமீன் கட்டவேண்டும்?" என்று பேசிக்கொண்டே கச்சேரிக்குப்போய் விசாரணையைக் கவனிப்பதுண்டு.

புதிய நரசிங்கம்!

முதன் முதல் விஞ்சு துரை தேசபக்தர்களுக்குக் கௌரவமாக ஆசனம் அளித்து விசாரித்து வந்தார். எத்தனையோ சாதிச் சண்டைகளும் சமயச் சண்டைகளும் மலிந்து, ஒற்றுமையும் அரசியல்-ஞானமும் புய வலிமையும் குன்றிப்போயிருக்கும் ஒரு நாட்டிலே சுயராஜ்ய முயற்சி வீண்தானே!—என்று பொருள்பட ஜில்லா மாஜிஸ்திரேட் தம் விசாரணையின் இடையே கூறியதுண்டு. விசாரணை முற்றுப் பெற்றதும் சிதம்பரம் பிள்ளை மீது கோபம் அதிகரித்தது.

வந்தேமாதரம் என்ற யுத்த கோஷத்தைக்கொண்டு ஏழைகளையும் கோழைகளையும் சுயராஜ்யப் போர்வீரர்களாக்க அவர் உள்ளபடியே பெரு முயற்சி செய்து பார்த்தார் என்பது தெளிவாகிவிட்டது. சிதம்பரம்பிள்ளை கப்பல் ஓட்ட முயன்றதால் தூத்துக்குடி வெள்ளையர்களின் கப்பல் வியாபாரம் கெட்டுப்போகுமே என்ற பயமும் துரையின் கோபத்தை அதிகப்படுத்தியது. (பாதி அரசனும் பாதி வியாபாரியுமான ஒருவகை நரசிங்க மல்லவா பிரிட்டிஷ் சிங்கம்?) சிதம்பரம் பிள்ளையோ விஞ்சு துரையின் வினயமான எச்சரிக்கைகளுக்கும் அஞ்சவில்லை; சிங்க முகத்தின் பயமுறுத்தல்களுக்கும் அசைந்து கொடுக்கவில்லை.

வழக்கின் ஒலிபரப்பு

அந்த நிலைமையைத்தான் பாரதியார் தமிழ்ப் பொது ஜன உள்ளத்திற்கு உகப்பான 'நந்தன் சரித்திர' மெட்டுகளில் சம்வாத ரூபமாகப் பாடி வைத்திருக்கிறார். இதனால் அந்த விசாரணைக்குத் தென்னிந்திய அரசியல்-சரித்திரத்தில் மட்டுமல்ல, தற்காலத் தமிழ் இலக்கியத்திலும் ஒரு ஸ்தானம் கிடைத்துவிட்டது.

> தொண்டு செய்யும் அடிமை—! உனக்குச்
> சுதந்திர நினைவோடா?

என்று தொடங்கும் பாடல்களும் 'நந்தன் சரித்திரக் கீர்த்தனை'களைப் போலவே நாடெங்கும் பரவி எத்தனை தேச பக்தர்களின் உள்ளங்களில் சுதந்திரக் கனலை மூட்டியிருக்கிறது!

சிதம்பரம் பிள்ளைக்கும் விஞ்சு துரைக்கும் இடையே நடந்த சம்வாதம் பாரதியாரின் மனோபாவத்திலே கிடந்து அந்த இதயஒலி பரப்பாக வெளிப்பட்டிருக்கிறது.

> சாதிச் சண்டை போச்சோ?— உங்கள்
> சமயச் சண்டை போச்சோ?

என்று விதேசி-விஞ்சு சுதேசி வீரரைக் கேட்பதாக அமைந்திருக்கும் அந்தக் கேள்வியில், அக்காலத்துத் திருநெல்வேலியின் எதார்த்த நிலையைப் பாரதியார் குறிப்பிடுகிறார் என்பதில் சந்தேகமில்லை. போலி ஆராய்ச்சிகளால் ஜாதி, சமயச் சண்டைகளை மூட்டி விடும் அந்த நிலைமை, தேச பக்த வீரர்கள் தண்டிக்கப்பட்ட பின்பு அதிகரித்து விட்டது.

சுதந்திரக் குற்றம்

சிதம்பரம் பிள்ளையின் முயற்சிகளால், சுதந்திரப் பேச்சுகளால், "சிறுமைக் குணங்கள்" கொஞ்சம் பதுங்கிக் கிடந்தன. அவர் தண்டிக்கப் பெற்றுக் கோவை சென்றதும், திருநெல்வேலி ஜில்லா

வில் சோம்பல், சோர்வு, அச்சம் முதலான "சிறுமைக் குணங்கள்" எல்லாம் பன்மடங்கு அதிகரித்து விட்டன. அந்தப் பிற்கால நிலையையும் ஆரூடம்போல் பிரதி பலிக்கிறது பாரதியார் வாக்கு,

சேர்ந்து வாழு வீரோ?—உங்கள்
சிறுமைக் குணங்கள்
போச்சோ?
சோர்ந்து விழுதல் போச்சோ?—
உங்கள்
சோம்பல் துடைத் தீரோ?

என்ற விஞ்சு துரையின் கேள்வியிலே,

சிதம்பரம் பிள்ளையின் உண்மைத் தொண்டுக்கு முன் சரித்திர, இலக்கிய ஆராய்ச்சிகளின் பெயரால் இனச் சண்டையையும் மொழிச் சண்டையையும் மூட்டி வந்த போலித் தொண்டு கூசி ஒடுங்கிப் போய்விட்டது சிறிது காலம்.

நாட்டில் எங்கும் சுதந்திர
வாஞ்சையை
நாட்டினாய், கனல்
மூட்டினாய்!
வாட்டி உன்னை மடக்கிச்
சிறைக்குள்ளே
மாட்டுவேன், வலி
காட்டுவேன்!

என்ற வீர வாதத்துடன் அரசாங்கம் கடுந் தண்டனை விதித்துத் தேசீயத்தை ஒடுக்க முயன்றதும், சில ஆண்டுகளுக்குத் தேசபக்தி நீறு பூத்த நெருப்பாகவே அடங்கியிருந்தது. சிற்சில அராஜகச் செயல்களே அங்கும் இங்கும் வெளிப்பட்டன.

கப்பல் ஓட்டியது

சிதம்பரம் பிள்ளையின் சுதேசிக் கப்பல் கம்பெனியும் சரியாக வேலை செய்யவில்லை. திரு. எஸ். வேதமூர்த்தி முதலியார் என்ற நண்பரைச் சிதம்பரம் பிள்ளை பிரான்சு தேசத்திற்கு அனுப்பி இரண்டு கப்பல்கள் வாங்கி வரச் செய்திருந்தார். அந்த இரு கப்பல்களும் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே ஓடிக்கொண்டிருந்தன. ஆரம்பத்தில் ஒழுங்காகவே ஓடிக் கொண்டிருந்தன. அந்த நிலையை,

கப்பல்ஏறு வாயோ?—அடிமை!
கடலைத் தாண்டு வாயோ?

என்றும், வெள்ளை வியாபாரியின் பொறாமையையும் உள் நடுக்கத்தையும்,

ஓட்டம் நாங்கள் எடுக்க
என்றே, கப்பல்
ஓட்டினாய், பொருள் ஈட்டினாய்

என்றும், விஞ்சு துரையின் கூற்றாகப் பாரதியார் கோஷிக்கிறார்.

அந்த இரண்டு கப்பல்களில் ஒரு கப்பல் ஓட்டைக் கப்பல், மற்றதும் பின்பு ஓடவில்லை. அதனால் சிதம்பரம் பிள்ளைக்கும், திரு. வேதமூர்த்தி முதலியாருக்கும் இடையே நட்பு மாறி மனஸ்தாபமும் ஏற்பட்டது.

இருவரும் உண்மைத்தொண்டர்

"சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல் செய்யவோ? நீங்கள் உய்யவோ?" என்று விஞ்சு துரை கேட்டதாகப் பாரதியார் பாடியிருக்கிறாரே, அந்தக் கேள்வியைத் திருநெல்வேலிப் போலித் தொண்டர்கள் உள்ளபடியே கேட்க ஆரம்பித்து விட்டார்கள், சுதேசிக் கப்பல்-கம்பெனியின் தொல்லைகளைக் கண்டதும்.

1908-ஆண்டில் பிள்ளை ராஜத் துவேஷ வழக்கில் தண்டிக்கப்பெற்றபின் போலித் தொண்டு தலைவிரித்தாடத் தொடங்கியதும், திரு. வேதமூர்த்தி முதலியார் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிதம்பரம் பிள்ளையின் சரித்திரத்தைச் சென்னை மாநகரில் வெளியிட்டு உண்மைத் தொண்டின் பெருமையையும் அவசியத்தையும் வற்புறுத்தினார். அந்த இரு புத்தகங்களிலும் முதலியாரின் பெயர் ஆசிரியராக வெளியிடப்படவில்லை. திருவாளர். பரலி சு. நெல்லையப்பர் மூலமாகத்தான் அந்த ஆசிரியர் எஸ். வேதமூர்த்தி என்று என்னைப் போன்றவர்களுக்குத் தெரிய வந்தது.

திரு. வேதமூர்த்தி முதலியாரும் சிதம்பரம் பிள்ளையைப் போல் உண்மைத் தொண்டில் ஈடுபட்டவர். அதனால் தான், கப்பல்-கம்பெனி விஷயமாகத் தமக்கும் பிள்ளைக்கும் இடையே ஏற்பட்டிருந்த மனஸ்தாபத்தையும் மறந்து, பிள்ளைக்குக் கிடைத்த கொடிய தண்டனையை நினைத்து நினைத்து நெஞ்சுருகி, அவர் பெருந் தொண்டின் நினைவுக்குறியாக வாழ்க்கை வரலாறு எழுதி வெளியிட்டார். பிள்ளை சிறையிலிருந்து விடுதலை பெற்றுச் சென்னைக்கு வந்ததும், அப்போது இங்கே தங்கியிருந்த திரு. வேதமூர்த்தி தம் பழைய நண்பரை ஆர்வத்துடன் நேரில் சந்தித்தார். ஆனால் அவர்கள் ஒருமித்த கருத்துடன் முன்போல் பெரும் பணியொன்றும் புரிய முற்படவில்லை.

பத்திரிகைக் கப்பல்

திரு. வேதமூர்த்தி முதலியார் சர்க்கார் உத்தியோகத்திலிருந்தவர். அதற்குரிய "மனநிலை" அவரிடம் இல்லை; எனவே தமது பதவியை ராஜிநாமா செய்து, தமது சுதந்திர உணர்ச்சிக்கு இணங்கப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டார். அரசியல் ஞானத்தைத் திருநெல்வேலி மக்களுக்குப் புகட்ட வேண்டுமென்று இரண்டு வாரப் பத்திரிகைகளைத் தம் சொந்த ஜில்லாவாகிய திருநெல்வேலியிலேயே

நடத்தி வந்தார். ஒன்று ஆங்கிலப் பத்திரிகையான 'பீபிள்ஸ் கார்டியன்' (Peoples Guardian) மற்றது 'சர்வஜன மித்திரன்' என்ற தமிழ்ப் பத்திரிகை. ஆங்கிலப் பத்திரிகை நின்ற பிறகுதான் தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்தார் என்று ஞாபகம். பத்திரிகையின் காரியாலயம், "திருநெல்வேலிப் பால" என்று அந்நாளில் அழைக்கப்பட்ட திருநெல்வேலி ஜங்ஷனில் பெரிய ரஸ்தாவிலே இருந்தது.

அந்த விலாசப் பலகையைப் பார்த்ததும் பத்திரிகைத் தொழிலில் அந்நாளிலேயே எனக்கு ஒரு மோகம் ஏற்பட்டது. 'சர்வஜனமித்திரன்' ஆசிரியர் என்னைப்போன்ற மாணாக்கர்களுடைய கட்டுரைகளையும் சிற்சில சமயங்களில் திருத்தி வெளியிட்டு எங்களை உத்ஸாகப்படுத்தினார். ஹிந்து கலாசாலை வைஸ் பிரின்ஸிபலைக் கிண்டல் செய்து நாடகப் போக்கில் எழுதியிருந்த ஒரு கட்டுரையைச் "சர்வஜன மித்திரன்" வெளியிட்டது எனக்கு இன்றும் தெளிவாக நினைவில் இருக்கிறது. அந்தக் கட்டுரையை அச்சில் பார்த்ததும் எங்களுக்கு ஒரே கொண்டாட்டம்; ஆனால் அந்த உபாத்தியாயருக்கோ...? 'பேனா நர்த்தனம் ஆனந்த நடனமாகவும் இருக்கும், கோர தாண்டவமாகவும் இருக்கமுடியும்!' என்பதை நான் அந்நாளிலேயே வேதமூர்த்தி முதலியாரின் 'சர்வஜன மித்திரன்' வாயிலாக ஒருவாறு அறிந்து கொண்டேன்.

சுதேசிக் கப்பல்போல் பத்திரிகைக் கப்பலும் சரியாக ஓடவில்லை திருநெல்வேலியில்! எனினும் உண்மைத் தொண்டரான முதலியாருக்கு அத்தொழில் அலுத்துப் போகவில்லை. சென்னையில் கொஞ்சகாலம் ஒரு முஸ்லீம் வாரப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அந்தப் பத்திரிகைக்கு "மகம்மதியன்" என்று பெயர். அந்நாளிலேயே சென்னையில் ஒரு முஸ்லிம் பத்திரிகை நடந்தது என்பதையும், அதற்கு ஒரு ஹிந்து தேசீயவாதி ஆசிரியராக இருந்தார் என்பதையும் இன்றைய நிலையில் நினைத்துப் பாருங்கள்! திரு. வேதமூர்த்தி ஓர் ஆங்கில மாதப் பத்திரிகையையும் சென்னையில் கொஞ்ச காலம் நடத்தி வந்தார்.

தம் சொந்தத் தமிழ் நாட்டில் தமது பத்திரிகை முயற்சிகள் பலன் தரவில்லையே என்று கடல் கடந்து பர்மாவுக்குப் போனார். அங்கே "ரங்கோன் டெயிலி மெயில்" என்ற ஆங்கில தினசரிப் பத்திரிகைக்கும், "ரங்கூன் மெயில்" என்ற ஆங்கில வாரப்பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்தார்.

வேதமூர்த்தியின் தமிழில் வேகமுண்டு, ஆங்கிலத்தில் அழகுண்டு: இரண்டிலும் ஆழமுண்டு. பர்மாவில் பத்திரிகை முயற்சி, தமிழ் நாட்டில் அவர் அத்துறையில் செய்த முயற்சிகளைக் காட்டிலும் அதிக அளவில் வெற்றி பெற்றன.

இறுதித் தொண்டு

சிதம்பரம் பிள்ளையின் இந்த நண்பர் பர்மாவில் வாழும் இந்தியர்களின் பிரதிநிதியாக டெல்லி ராஜாங்க சபையில் அங்கம் பெற்று உண்மைத் தொண்டு ஆற்றினார். போலித் தொண்டு இவருக்குக் கொஞ்சமும் பிடிக்காது. வீணான மதச் சண்டைகளையும் இனச் சண்டைகளையும் பரிகசிப்பார், கண்டிப்பார். இப்பெரியார் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு கங்கையில் நீராடும் போது விழுந்து உயிர் துறந்தார்.

சிதம்பரம் பிள்ளையின் பிரசித்தமான உண்மைத் தொண்டைப்போல் அவ்வளவு தூரம் வெளிப்படையாகத் தெரிந்திராத வேதமூர்த்தியின் தொண்டும் நாட்டுக்குத் தக்க சந்தர்ப்பத்தில் தக்க பயன் அளித்தது என்றே சொல்ல வேண்டும்.

கட்டுரையாளருக்கு

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுத விரும்பும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையின்மூலமே சிருஷ்டி செய்யும்படி கோருகிறோம். குறிப்பாகச் சுட்டிக் காட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாதிருக்க வேண்டும்.

— ஆசிரியர்



சேலம், ஸ்ரீ ஏ. வி. காளியா பிள்ளையின் பேத்தி ஸௌ. கமலாவுக்கும், சென்னை, பெரியமெட் ஸ்ரீ டி. எம். பி. மீனாட்சி சுந்தரத்தின் குமாரர் சி. சிவானந்தத்துக்கும் சமீபத்தில் திருச்சியில் விவாஹம் நடைபெற்றது,

கதையும் கற்பனையும்

என்ன வேட்டை

★

“இன்று நமக்கு நல்லவேட்டை தான்! அதோ ஒண்டியாகப் பிரயாணி வருகிறான், ஓடி வருகிறான். மடியில் கனமிருந்தால்தானே அப்படிப் பயந்து இந்தக் காட்டைவிட்டு ஓடப் பார்ப்பான்?” என்றான் ஒருவன், தன்னுடன் வந்த இருவரையும் நோக்கி.

யார் துரத்துகிறார்?

மூவரும் அந்த வழியே மெதுவாக வந்துகொண்டிருந்தார்கள். தங்களைப் பார்த்த பின்பும் அந்த ஆசாமி வேறு எந்தப் பக்கமாவது ஓடிப்போகாமல் தங்களுக்குள் நேரே ஓடிவந்தது அவர்களுக்கு அதிசயமாகவேயிருந்தது. ஏனென்றால் அவர்கள் கையிலேவாளும் கோலும் வைத்திருந்தார்கள் திருடர்கள்.

“அவர் ஏன் அப்படி வருகிறார்? நம்மைப்போன்ற திருடர் யாரோ துரத்திக்கொண்டு வருகிறார்களா?” என்று அவர்கள் ஆலோசித்தார்கள்.

அவர் அருகே வந்ததும், “சாமியார்” என்று தெரிந்துகொண்டார்கள். “ஏன் சாமி! இந்தப் பயம்? உமக்குப் பின்னால் யார் அப்படிப் பயமுறுத்துகிறார்?” என்று கேட்டார்கள். அவரோ “எமன் பயமுறுத்துகிறான் எனக்குப் பின்னால்!” என்று சொல்லிக்கொண்டே கம்பிநீட்டி விட்டார். கள்வர்களுக்கோ சிரிப்பு வந்துவிட்டது.

எமனா, இஷ்டமூர்த்தியா?

“நாம்தான் பிரத்தியட்ச எமராஜாக்கள் ஆச்சே! வேறு எமனும் உண்டா?” என்று அவர்கள், சாமியார் வந்த வழியே போய்ப் பார்த்தார்கள். ஒருவரையும் காணவில்லை. அந்தக் காட்டு வழியின் அக்கம்பக்கமெல்லாம் துருவிப் பார்த்தார்கள். ஒரு குகை இருந்தது. அந்தக் குகைக்குள்ளே, சாமியாரைத் துரத்தியடித்த ஆசாமி ஒருவேளை தங்களைக் கண்டு பதுங்கிவிட்டானோ என்று பார்த்தார்கள்.

பிரமித்துப் போனார்கள். “நீயா எமன்? நாங்கள் தேடித் தவிக்கும் தெய்வம் அல்லவா நீ? உனக்காகத் தானே தவங்கிடக்கிறோம், வெளியிலும் சிறையிலும்!” என்று நெடுங்கும்பிடு போட்டார்கள். சாமியாரைப் பயமுறுத்திய அந்தச் சாமி அவர்களுடைய இஷ்ட தெய்வம் தான், ஒரு பொற்குவியல்தான்!

“இஷ்ட தெய்வமே! உனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறோம்! அதிர்ஷ்ட தேவதையே! உனக்காகத்தானே எங்கள் மனிதச் சகோதரர்களையும் பலியிடுகிறோம்!” என்று போற்றினார்கள், பூரித்துப்போனார்கள்.

கொட்டி வைத்தாள்! விட்டு வைத்தார்!

“பைத்தியக்காரன், துரதிருஷ்டம் பிடித்த மூதேவி!” என்றெல்லாம் சாமியாருக்கு ஸஹஸ்ர நாம அர்ச்சனை நடந்தது. நாட்டிலே பணம் கிடையாமல் காட்டுக்கு வந்துவிட்ட மூதேவிக்குச் சீதேவி தரிசனம் கொடுத்தும் அதிர்ஷ்ட தேவி அருள் செய்யவில்லையே!— என்று எண்ணினார்கள். உண்மையில். நாட்டிலே பண ஆசையால் விரத பங்கம் ஏற்படுமென்று துறவி காட்டுக்கு வந்துவிட்டார் என்பதை அவர்கள் எப்படி அறிவார்கள்? ஒவ்வொருவனும் தன்னைக்கொண்டு தானே உலகத்தை அளந்து பார்க்கிறான்!

பணத்திற்குப் பயந்து காட்டுக்கு வந்த துறவியின் வைராக்கிய நிலையைச் சோதித்துப் பார்க்கத்தான் அந்தக் குகையிலே அவ்வளவு செல்வத்தைச் சீதேவி கொட்டி வைத்தாள் போலும். பெரிய குகையாக இருந்தும் பாறைக்குள்ளும் பூமிக்குள்ளும் மறைந்திருந்ததால் அந்தத் திருடர்களுக்கும் அது முதன் முதல் தெரியவில்லை அந்தப் பொருள் அப்படியே தூங்கிக் கிடந்தது.

வழி நடந்த களைப்பினால் சாமியார் அங்கே தங்கி இளைப்பாற வேண்டும் என்றுதான் முதன் முதல் எண்ணினார். குகைக்குள் பிரவேசித்ததும் பிரகாசமாய்த் தெரிந்த அந்தக் குவியலை நெருங்கிப் போய்ப் பார்த்தார். “அந்த அரண்யத்திலும் வந்து பயமுறுத்துகிறதே! பொருளா இது? இருள் அல்லவா, மரணமல்லவா?” என்று அலறியது அந்த வேதாந்தியின் உள்ளம். உடனே ஓட்டம் பிடித்தார் வந்த வழியாக. அவர் அப்படிச்செய்யாமல் அந்தப்பொன்னை மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டு வந்திருந்தால் இந்தத் திருடர்கள் அவரைக் கொன்றே தீர்த்திருப்பார்களல்லவா? அவர் எமனை உடன் கொண்டு வராமல் பின்னாலே விட்டு விட்டார்: அந்தோ! அந்தத் திருடர்கள் எப்படி அறிவார்கள்?

“சாமியாரைத் துரத்தியடித்த மரண தேவதையே! உன் மூஞ்சியைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்று தோன்றுகிறதே! நீயா மரணம்? நீ வாழ்வல்லவா? உன்னைப் பிரியமாட்டோம்!” என்று அந்தத் தேவதைக்குப் பக்தர்களாகி விட்டார்கள்.

“தரித்திர புத்திரர்களான நாங்கள் இன்றே முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்து விட்டோம்! அந்தத் தாயாதிக்காரர்களை இன்றுவரை வெறுத்து வந்தோம்; கண்ட கண்ட இடத்தில் அடித்துக் காசு பறித்தோம். அவர்களும் எங்களை அகப்பட்டுக் கொண்டபோது நையப் புடைத்தார்கள், சிறையில் தள்ளினார்கள். எல்லாம் தாயாதிக் காய்ச்சல்! இனிமேல் நாமும் அவர்களோடு ஐக்கியமாகி விடுவோம்!” என்றெல்லாம்ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள்.

அப்போது ஒரு திருடன், இனி முதலாளியாகப் போவது இருக்கட்டும் “இப்போது பெருங்குடல் சிறுகுடலைப் பிய்த்துத் தின்றுவிடும் போலிருக்கிறதே! ஏதோ தின்று இரண்டு நாள் ஆகிவிட்டதே!” என்று பெருமூச்சுவிட்டான்.

அனுப்பி வைத்தார்கள்

உடனே மற்றத் திருடர்கள், “இந்தக் குவியலைக் கொண்டு போய்த் தானே சாப்பாட்டுக்கும் வழி செய்து கொள்ள வேணும்?” என்றார்கள். ஆனால் மூட்டை மூட்டையாகக் கட்டிக் கொண்டுபோவதற்குத் துணிகள் வேண்டுமே!

ஆகவே அவர்கள், “நம்மில் ஒருவனைக் கொஞ்சம் தங்கத்தோடு அனுப்பி வைப்போம். அவன் அருகேயுள்ள ஊருக்கு விரைந்துபோய்த் துணி முதலியவற்றையும், நம்முடைய பசிக்குத் தேவையான உணவு வகைகளையும் வாங்கி வருவான். இன்றாவது நல்ல சாப்பாடு கிடைக்கட்டும்” என்று தீர்மானித்தார்கள்.

அந்தத்தீர்மானத்திற்கு இணங்கி ஒரு திருடன் வெளியே புறப்பட்டான். மற்ற இருவரும் தங்கக் குவியலைக்காவல் செய்துகொண்டிருந்தார்கள்.

சதியும் உதயமாயிற்று!

தனியாக வெளியே போன கள்வன் ஏதேதோ மனராஜ்யம் செய்துகொண்டே போனான். “தனக்குக் கிடைக்கும் தங்கத்தைக் கொண்டு எப்படி ஒரு பெரிய வீடு கட்டலாம், வேறு என்ன வசதிகள் செய்து கொள்ளலாம்?” என்று திட்டம் போட்டுக்கொண்டே போனான்.

குறித்த ஊரையடைந்ததும் சாப்பாட்டு விடுதிக்குப் போய்ப் பிரியமான உணவுகளை வாங்கி வயிறு நிறையச் சாப்பிட்டான். உத்ஸாகமாய் இருந்தது. துஷ்டனுடைய உத்ஸாகமல்லவா? துன்மார்க்கத்திலே செலுத்தக்கூடியதானே!

“அந்தத் தங்கக் குவியலை அப்படி ஏன் மூன்று பங்கு போட வேணும்? அது அவ்வளவு அவசியமா? தானே ஏகபோகமாய் அனுபவித்தால் ஒரு பெரிய முதலாளியாகிவிடலாமே!” என்ற ஆலோசனையும் அந்தத் திருடன் உள்ளத்தில், ஜவுளிக் கடையை நெருங்கும்போது உதயமாகிவிட்டது.

வேண்டிய துணிகளை வாங்கிக் கொண்டு, தன் உடம்பையும் பட்டுத் துணிகளால் மாப்பிள்ளை போல் அலங்கரித்துக் கொண்டு, கடைத் தெரு வழியாக நடந்தான். அந்த ஊரின் பெரிய முதலாளி ஆகிவிட்டதாகவே அவனுக்கு தோன்றியது. அந்த மனோராஜ்யத்திலே முழுராஜ்யமும் ஸ்வாம்ராஜ்யமாக அவனுக்கே கிடைத்து விட்டது! அப்போது ஒரு கடையில், “இந்த விஷம் வைத்திய சிகிச்சைகளுக்குத் தான் கொடுக்கும்படி லைசென்ஸ் பெற்றது” என்ற ஒரு பலகை தொங்கிக் கொண்டிருந்தது. அது அவனை நோக்கி, “இதோ உன் கனவு நனவாகி விட்டது!” என்று சொல்வதுபோலிருந்தது.

கடைக்காரனை மெள்ளநெருங்கி, தானும் ஒரு வைத்தியப் பரீட்சை செய்யப் போவதாகவும், தான் மற்ற வைத்தியர்களைக் காட்டிலும் அந்த விஷத்திற்கு அதிக விலை கொடுக்கவிரும்புவதாகவும் தெரிவித்தான். கடைமுதலாளிக்கு ஒருவாறு விஷயம் புரிந்துவிட்டது. “நமக்கென்ன! நாம் கொடுக்காவிட்டால் வேறு எவனாவது கொடுத்து அந்தப்பொன்னை அடித்துக் கொள்ளத்தானே போகிறான்?” என்று தன் மனச்சாட்சியைச் சமாதானப் படுத்திக்கொண்டே வியாபாரத்தை முடித்துக்கொண்டான்.

தோழர்களுக்கும் திருடன் நல்ல நல்ல உணவு வகைகள் எல்லாம் வாங்கிக்கொண்டான். “ஆசாமிகள் எவ்வளவு பிரியமாய்ச் சாப்பிடுவார்கள்! அப்பால் ஒரு கவலையும் இல்லாமல் கண்ணை மூடிக்கொள்வார்கள்! நமது மூளையே மூளை, யோகமே, யோகம்!” என்று எண்ணிக்கொண்டே விரைவாக வழி நடந்து குகைக்கு அருகேவந்து விட்டான்.

யோசனை உதயமாகிவிட்டது!

இந்த ஆசாமிக்கே இவ்வளவு பேராசை என்றால், தங்கக் குவியலைத் தரிசித்தவண்ணம் அருகேயிருந்த ‘பக்தர்’களின் மன நிலையைச் சொல்லவும் வேண்டுமோ? அவர்கள் மூளையிலும் தீவிரமான ஆலோசனை ஒன்று உதயமாகி விட்டது. “ஆகாரம் வந்து சேரட்டும், உடனே ஆசாமியைப் பைசல் செய்துவிடுவோம்! அப்படியானால் மூன்று பங்கு போட வேண்டியதில்லையே. நாமிருவருமே பங்கிட்டுக் கொண்டு பட்டணம் போய்ப் பெரிய முதலாளிகளாக வாழலாமே!” என்று அவர்கள் சதியாலோசனை செய்துகொண்டிருந்தார்கள்.

அந்தச் சதியாலோசனைக்கிணங்க, ஆகாரம்முதலியவற்றோடு திரும்பி வந்த ஆசாமியைக்குகையிலிருந்த இருவரும் தங்கள் ஈட்டிகளால் குத்திக் கொன்றுவிட்டார்கள். பிறகு, “மூடப் பயல்! நம்மை முழுக்க முழுக்க நம்பிவிட்டான்!” என்று சிரித்துக்கொண்டே அவன் கொண்டுவந்த ஆகாரத்தைச் சாப்பிட்டார்கள்... “ஐயோ!-பயல் அவனும் மோசம் செய்துவிட்டானே! இனி என்ன செய்வது?” என்று இருவரும் கதறினார்கள், பதறினார்கள்.

கள்வர்கள் சாகும்போது சாமியாரை நினைத்துக்கொண்டார்கள். “எமன் துரத்தியடிக்க அவர் தப்பி விட்டார். நாமோ வலுவிலே வந்து எமனுக்குப் பலியானோம்!” என்று அவர்கள் புலம்பிக் கொண்டே பிராணனை விட்டார்கள்.

* * * *

ரஸமான, பொருள் பொதிந்த இக்கதை. நமது நாட்டுக் கதையன்று; இத்தாலி அறிஞர் ஒருவர் எழுதியிருக்கும் அருமையான கதைகளில் ஒன்றைத் தழுவியது. முஸோலினி பிறந்த நாட்டிலே இந்தக்கதையும் பிறந்தது என்றால் கொஞ்சம் அதிசயமாயிருக்கிறதல்லவா? ஹிட்லரோடு சேர்ந்து சாம்ராஜ்யக் கனவு கண்ட சர்வாதிகாரிக்கு இக்கதை ஓர் எச்சரிக்கையாக இருந்தும் பயன்படவில்லை. சாமியாரின் எச்சரிக்கையைத் திருடர்கள் கவனித்தார்களா?



வானர சேனை

சிவராத்திரி தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டும் என்று கோபுவின் பள்ளிக்கூடத்தில் திட்டம் போட்டிருந்தார்கள். அதற்காக அந்த நாடகத்திற்கு அபாரமாக ஒத்திகை நடந்து கொண்டிருந்தது. பிச்சையும், சுப்புவும் பள்ளிக்கூடத்தில் பெயர் போனவர்களாதலால், அவர்களை முக்கிய நாடக பாத்திரங்களாக பொறுக்கியிருந்தார்கள். இது கோபுவிற்குப் பிடிக்கவேயில்லை.

அன்று வழக்கம் போல வானரசேனை ஆலோசனைக் கூட்டம் கூடியபொழுது கோபு சொன்னான்: "இந்த சுப்புவும் பிச்சையும் நாடகம் நடிச்சா நான் நாடகம் பார்க்க வரப்போறதில்லை. அசடுகள் ரெண்டும் சேர்ந்து 'தத்துப் பித்துன்னு' ஏதாவது உளறிக் கொட்டும்." "ஆமாண்டா நாம நாலு பேரிலே யாரையாவது எடுத்துக்கப் படாதோ? வாத்தியாரை நாம் காக்கா பிடிக்காட்டா, வாத்தியாரும் நம்மை காக்கா பிடிக்கறதில்லை பாரேன்! எனக்கு நாடகத்திலே நடிக்க ரொம்ப ஆசைடா!" என்றான் மணி. "யாருக்குத்தான் இல்லையாம்? நம்பளை எடுத்துக்கலே, நாம நடிக்கலே. இதுக்கு இப்போ என்ன செய்யறது?" என்று சற்று கவலையுடன் கேட்டான் அம்பி. இதற்கு பாலு, "நான் ஒண்ணு சொல்றேன் கேட்பயளா?" என்றுதான் சாதாரணமாக இழுக்கும் இழுப்பை இழுத்தான்.

★

"என்னடா, சொல்லு பார்ப்போம்!" என்று கோபு கேட்க பாலு சொன்னான், "இன்னைக்கு ஒரு நாள் நாம் ஹெட்மாஸ்டரை காக்கா பிடிச்சுடறோம். நாடகத்திலே இடம் கிடைச்சதும் அவரை மறந்துட்டாப் போச்சு." "சரிதான்: ஆனால் அவரை எப்படி காக்கா பிடிக்கறதாம்? அவரேதான் நம்பளை நாற்பது தடவை உதைச்சிருக்காரே, இப்போ மட்டும் நம்ம இஷ்டப்படி நடப்பாரோ?" என்றான் மணி.

வழக்கப்படி கோபு ஒரு நிமிஷம் யோசித்து விட்டுச் சொன்னான். "இதைக் கேளுங்கோ! காக்கா பிடிச்சு ஒரு பிரயோஜனமும் இல்லை.

போருதுக்கும் நமக்குப் பிச்சையாட்டமா அவ்வளவு நன்னு காக்கா பிடிக்க வராது. சும்மா வாங்கோ ஹெட் மாஸ்டரண்டை போய் கெஞ்சலாம். அது போறும். அவர் மனம் இளகுறப் போலே கெஞ்சினா, தன்னாலே வேஷம் போட அனுமதிச்சுடுவார்." என்று கூறினான்.

வானரசேனை யுத்த முஸ்தீப்புகளுடன் மறுநாள் ஹெட்மாஸ்டர் மேல் படை எடுத்தது.

ஹெட் மாஸ்டரின் அறை வாயிலில் நின்றிருந்த 'பியூன் "போங்கப்பா, ஐயா முக்கிய வேலையில் இருக்காரு. சித்தே பொறுத்து வாங்கோ" என்றதனால் சற்று ஏமாற்றம் அடைந்தது வானரசேனை. இருந்தும், காரியம் சித்தி ஆகவேண்டும் என்ற ஆத்திரத்தில் சேனைத் தலைவன், "எங்களுடையது ரொம்பமுக்கியவேலை. உடனே அவரிடம் தெரிவிக்கவேண்டும்...ஆமாம் ரொம்ப முக்கியம்." என்று சிறிதும் சந்தேகம் தோன்றுதபடி முகத்தை வைத்துக் கொண்டு பேசினான். சேனை வீரர்களும் தலைவனை ஆமோதிக்க, பியூன் அவர்களை உள்ளே விட வேண்டியதாயிற்று.

உள்ளே சென்ற வானர சேனை மிகவும் பணிவுடன் "நமஸ்காரம் ஸார்."என்றது. ஏதோ வேலையாக இருந்த ஹெட்மாஸ்டர் அவர்களைப் பார்த்து சிரித்தபடி, "ஓ! வானர சேனையா?...என்ன! அதற்குள் மறுபடியும் ஒரு விஷயமா? உங்க வகுப்பு வாத்தியார் உங்களை என் னிடம் மன்னிப்புக்கேட்க அனுப்பியிருக்காப் போல இருக்கே? சரி மன்னித்தேன். போங்கோ வகுப்புக்கு"

என்று சொல்லிவிட்டு, மறுபடியும் தன் வேலையை கவனிக்கலானார். பசங்களின் முகத்தில் அசடு வழிந்தது "இல்லை ஸார்...வந்து நாடகத்தில்..." என்று ஆரம்பித்து நிறுத்தினான் மணி. "என்ன நாடகத்திலே நடிக்க போறதில்லையா? காலமேயிருந்து மூணுபேர் வந்து, 'நான்

நடிக்கமாட்டேன்' என்று சொல்லிட்டுப் போயாச்சு. இனிமே நீங்க நாலுபேரும் கூட அதைவிட்டுப் போயிட்டா, நாடகமே வேண்டாம் என்றுதான் வைக்க வேண்டி வரும்." என்று பதறினார் ஹெட்மாஸ்டர். "இல்லை சார், நாங்க நடிக்கப்போறோம்." என்றான் பாலு. பின்னே எதற்கு இங்கே வந்திருக்கயள்? என்றார் ஸார். உங்களைக் கேட்டு எந்த இடத்திலே நாங்க நடிக்கணும்னு தெரிஞ்சுக்கத்தான் வந்திருக்கோம். எங்களுக்கு யாரும் இன்னும் 'பார்ட்' கொடுக்கலை. நீங்கதான் சொல்லணும் என்று பேச்சை முடித்து வைத்தான் தலைவன் கோபு. "அப்படிச்சொல்லுங்கள்!" என்று துள்ளிக் குதித்தார் ஸார். "காலமே மூணு பேர் வரமாட்டோம் என்று சொன்னாளே, அவா இடத்தை நீங்க எடுத்துக்கோங்களேன். நாடகத்திலே ஒரு கட்டத்திலே, கதாநாயகனும் தோழனுமா வேட்டையாடறபோது, பெரிய மழையும், இடியும், மின்னலுமா வறது. மின்னலைப்போல் வெளிச்சம் போட ஒரு ஆள் வேணும், இடி இடிப்பது போல தகரத்தில் சப்தம் போட ஒரு ஆள், பின் மழை பெய்வதுபோல சிறு காகிதத் துண்டுகளை கிழித்துத்தூவ ஒருத்தன். இப்படி மூணு பேர் வேண்டும். நீங்க இருக்கயளே! ரொம்ப சந்தோஷம்!" என்று சந்தோஷப் பட்டார் ஹெட்மாஸ்டர்.

முதலில் வானரசேனைக்குப் 'பகீர்' என்றது. இந்த அற்ப வேலைக்கா இவர்கள் ஆசைப் பட்டார்கள்? ஒருவர் முகத்தில் ஒருவர் விழிக்க இஷ்டம் இல்லாமல் நாலு பேரும் ஹெட்மாஸ்டர் ரூமிலிருந்து வெளியே வந்தனர் "ஆமாம், இந்த அற்ப விஷயத்துக்கு இவ்வளவு ஆனந்தம் இந்த வாத்தியாருக்கு! போங்கடா! நான் ஒண்ணும் செய்யப் போறதில்லை. வீட்டிலே சுகமா உட்கார்ந்துடப்போறேன்." என்று முணுமுணுத்தான் பாலு.

சிவராத்திரிதினம் வந்தது. ஆறுமணிக்கு நாடகம் ஆரம்பம்.

மேடைக்குப் பின்புறத்தில் இருந்த சுவரில் சற்று உயரத்தில் ஒரு ஜன்னல் இருந்தது. அந்த ஜன்னலுக்குப் பின் ஒரு சிறு வராண்டா. இங்கு பாலுவும், கோபுவும் சிறு காகிதத்துண்டுகளை ஜன்னல் வழியாகக் கீழே தூவ தயாராகக் காத்திருந்தனர். மணி தகரத்தை வைத்து கொண்டும், அம்பி வெளிச்சம் போட 'டார்ச் லைட்'டை வைத்துக்கொண்டும் உட்கார்ந்திருந்தனர்.

நாடகம் ஆரம்பமாயிற்று. வானரசேனைக்கு நாடகம் ரொம்பப் பிடித்திருந்தது. சுப்புவும், பிச்சையும் ஹாஸ்யமாக நடிப்பதை வெகு சந்தோஷமாக ரசித்தது வானர சேனை.

மழை வரும் கட்டம் பக்கத்தில் நெருங்கிக்கொண்டிருந்தது. அம்பியும் மணியும் தயார் ஆனார்கள். கோபுவும் பாலுவும் காகிதத்துண்டுகளை எடுக்க திரும்பியதுதான் தாமதம், காகிதங்கள் வைத்திருந்த கூடை எங்கோ காணுமல் போனது கண்டு திகைத்துப் போனார்கள்! கோபு விழித்தான். "அடே, வேறே காகிதம் எங்கிருந்துடா கொண்டு வரது? நேரம் ரொம்ப ஆயிடுத்தே! என்ன செய்வது?" என்று அழமாட்டாக் குறையாக பாலு சொன்னான். கோபுவுக்கு 'சட்'டென்று ஒரு யோசனை தோன்றியது. "பாலு, சற்று இங்கேயே இருடா, நான் ஒரு நிமிஷத்திலே திரும்பி வந்து நிஜ மழை மாதிரி செய்து விடறேன்." என்று



சொல்லி, மாடிப்படி வழியே இறங்கி ஓடினான்.

சிறிது நேரத்தில் மழை வரும் கட்டம் ஆரம்பித்து விட்டது. மணி தகரத்தை பலமாகச் சப்தித்தான். அடிக்

கொரு தடவை அம்பி 'டார்ச் லைட்'டை 'பளிச், பளிச்' சென்று மேடைமேல் வீசினன். ஒரே நிமிஷத்தில் தயாரான கோபுவும், பாலுவும் சரியான சமயத்தில் மழையை வரவழைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

மழை பெய்ய ஆரம்பித்ததுதான் தாமதம், கதாநாயகனும், தோழனும், மாசி மாதக் குளிரில் ஜில் என்று மழைஜலம் தேகத்தில் பட்ட



தும், ஒரே கூக்குரல் இட்டுக் கொண்டு திரைக்குப்பின் மறைந்தனர்! நாடகமும் பாதியில் அப்படியே நின்று விட்டது!

என்ன காரணம் என்று மேலே பார்த்தால், கோபுவும், பாலுவும் சாந்தமாக பூவாளியை வைத்துக்கொண்டு மேடைமேல் ஜலத்தை விட்டுக்கொண்டிருந்தார்கள்!

(பால்கன் ஜீ-பாரி)

கல்லுப்பட்டி செட்டியார்

☆

(வேண்தாமரை)

★

கல்லுப்பட்டிக் கிராமத்து செட்டியாருக்கு பல்லு இரண்டு போன கதை தெரியுமோ? தெரியாதா? கல்லுப்பட்டிக் கிராமமெங்கும் அதைச் சொல்லிச் சொல்லிச் சிரிக்கிருர்களே. இன்னும் அது காதில் விழவில்லையா? அதிசயமாகத் தானிருக்கிறது. இப்பொழுதாவது தெரிந்துகொள்ளுங்கள்.

அவ்வூர் செட்டியார் ஒரு பெரிய லோபி. கால்க் காசைக்கூட பிழிந்தெடுத்து சொட்டுச் சொட்டாகத் தான் செலவழிப்பார். அதைக்கூடவேணுமா, வேண்டாமா என்று ஆயிரம் தரம் ஆலோசித்துவிட்டு அரை மனதுடன்தான் விட்டுப் பிரிவார்.

இப்பேர்ப்பட்ட கல்லுப்பட்டிக் கிராமத்துச் செட்டியார் ஒரு நாள் ஒரு தேங்காய் வாங்கி வர கடைத்தெருக்குச் சென்ருர். ஒரு கடையில் போய் தேங்காய் விலை என்னவென்று கேட்டார். ஒன்று நாலணு வென்ருன் கடைக்காரன். "மூன்று அணுவுக்குத் தருகிருயா?" என்று கேட்டார் செட்டியார். "மூன்று அணுவுக்குத் தேங்காய் இங்கே இல்லை. மூன்று மைல் நடந்து மூப்பன் கடைக்குப்போனுல் மூன்றணுவுக்குக் கிடைக்கும்" என்ருன் கடைக்காரன்.

"மூன்று மைல் நடந்தாலென்ன? அணு ஒன்று லாபம்" என்று ஆலோசித்தார் செட்டியார். ஒரணு லாபத்திற்காக மூன்று மைல் நடையைக்கூட அவர் பெரிதாக மதிக்கவில்லை. தலையிலே துண்டைக் கட்டிக்கொண்டு மள மளவென்று நடந்தார் மூப்பன் கடையைப்பார்த்து.

வெய்யிலிலே வியர்க்க வியர்க்க நடந்து செட்டியார் மூப்பன் கடைக்கு வந்தார். தேங்காய் விலை கேட்டார். "மூன்றணு" என்ருன் மூப்பன். செட்டியார், இடுப்பில் செருகியிருந்த பணமுடிச்சை அவிழ்த்தார். ஆனுல் அப்பொழுது வேருெருவர் வேருரிடத்திலிருந்து, தேங்காய் வாங்கிக்கொண்டுபோவதைப்பார்க்கவே, குடுகுடுவென்று அவரிடம் ஓடி அந்தத் தேங்காயின் விலை கேட்டார்.

"இந்தத் தேங்காய் இரண்டணு விலை. தேவரின் தென்னந்தோப்பிலே வாங்கினது" என்ருர் அவர்.

"தேவரின் தென்னந்தோப்பா, அது எங்கே இருக்கிறது?" என்று கேட்டார் செட்டியார்.

"இங்கிருந்து இன்னும் இரண்டு மைல்." என்ருர் அவர்.

செட்டியார் மூப்பனிடம் தேங்காய் தேவையில்லை என்று சொல்லிவிட்டு தென்னந் தோப்பை நோக்கிப் புறப்பட்டார். "இரண்டணுவுக்குக் கிடைப்பதை விட்டுவிட்டு மூன்றணுவுக்கு வாங்குவது முட்டாள்தனமல்லவா? எதற்கும் மூன்று மைல் நடந்தாய் விட்டது. இன்னும் இரண்டு மைல் நடந்தாலென்ன? அணு

ஒன்று லாபமாகிறதே." என்றெண்ணினுர் அவர்.

இப்படி எண்ணமிட்டுக் கொண்டு செட்டியார் தேவரின் தென்னந் தோப்பை அடைந்தார். தேவரைப் பார்த்து தேங்காய் விலை கேட்டார். தேவர் "இரண்டணுவுக்கு ஒன்று" என்ருர்.

"தேவரே, இதற்கு இரண்டணு அதிகமல்லவா?" என்ருர் தேவரைப்பார்த்து.

"நன்ருய்ச் சொன்னீர். தேங்காய்க்கு விலை கொடுக்காவிட்டாலும் மரத்திலேறிப் பறித்ததற்காகவாவது இரண்டணு கூலி தர வேண்டாமா?" என்ருர் தேவர்.

தேவர் இப்படிச் சொன்னதைக் கேட்டதும் செட்டியாரின் மூளையில் ஒரு புதிய யோசனை உதித்தது. "தேவரே! அப்படியானுல் நானே தென்னை மரத்திலேறி தேங்காய் பறித்துக்கொண்டால் உமக்கு இரண்டணு தர வேண்டாமே" என்று ஒரு போடு போட்டார்.

பார்த்தார் தேவர் "பலே பேர்வழியாயிருக்கிருரே இவர். இரண்டணு லாபம் பிடிப்பதற்காக தென்னை மரத்தில் ஏறக்கூட தயாராயிருக்கிருரே, எதற்கும் வேடிக்கை பார்ப்போம்" என்று மனதிற்குள் சிரித்துக் கொண்டே செட்டியாரைப் பார்த்து "அப்படியானுல் மரத்திலேறிப் பறித்துக் கொள்ளும், இரண்டணு தரவேண்டாம்" என்ருர்.

செட்டியார் தன் யுக்தியை தானே மெச்சிக்கொண்டு, வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டு தென்னை மரத்திலே ஏறினுர்! தேவர் மூக்கிலே விரலை வைத்துக் கொண்டே வேடிக்கைபார்த்துக்கொண்டு நின்ருர். செட்டியார் தென்னை மரத்திலேறும் காட்சியைப் பார்த்ததும் தேவருக்கு வந்த சிரிப்பை அடக்கவே முடியவில்லை. வயிறு குலுங்கச் சிரித்தார். கையிலே காமிரா இருந்தால் போட்டோகூடப் பிடித்திருப்பார்!

பிலடல்பியாவில் நடந்த சர்வதேச ஸ்திரீகள் மகாநாட்டுக்குப் பிரதிநிதியாகச் சென்றிருக்கும் எம். பி. யோத் (பம்பாய்) இந்திய ஸ்திரீகள் தேசியக் கவுன்ஸில் உப தலைவர் எல். ஜே. ஷிராட் (வலது)

செட்டியாரால் பாதிதான் ஏற முடிந்தது. பிறகு, பெருத்த அந்தத் தொந்தியைத் தூக்கிக் கொண்டு மேலேயும் ஏற முடியவில்லை. கீழேயும் இறங்க முடியவில்லை, பாவம்! திரிசங்குவைப்போல திண்டாடினுர்! செட்டியாருக்கு தென்னை மரத்திலே ஏறிப் பழக்கமா என்ன?

கடைசியில் முழு பலத்தையும் உபயோகித்து அவர் மேலே தாவினுர். அவ்வளவுதான்! கால் வழுக்கிவிட்டது. 'தடாலென்' று தரையில் பிரக்ஞையற்று விழுந்தார். அதோடு முன்வாய்ப் பல் இரண்டும் உடைந்து போயிற்று.

இருளப்பத்தேவர் உடனே நான்கு ஆட்களை அழைத்து வந்து செட்டியாரை டாக்டரிடம் எடுத்துச்சென்ருர். அங்கே செட்டியார் நான்கு வாரம் வைத்தியம் செய்துகொள்ளவேண்டி வந்தது. நாற்பது ரூபாய்க்கு டாக்டரும் பில் போட்டுவிட்டார்!

இதுதான் கல்லுப்பட்டி செட்டியாருக்குப் பல்லு இரண்டு போன கதை. நாலணுலாபம் பிடிக்கப்போய் பல்லு இரண்டும் போனதோடு ரூபாய் நாற்பதும் நஷ்டம்!

* * * *

பால்கன்-ஜீ-பாரி பகுதியில் வெளியிடவேண்டிய விஷயங்களை கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவும்:

சகோதரன் ஹரி.
"குலிஸ்தான்"
கார்,
பம்பாய் 21.

மாங்காய் மாலை

★ கோமதி சுப்பிரமணியம் ★

அன்பு மிக்க தங்கைக்கு ஆசீர்வாதம்,

உபய க்ஷேமம். உன்னுடைய கடிதம் கிடைத்தது. விஷயம் புரிந்துகொண்டேன். நான் ஒரு நாடகத்தில் நடிக்கப் போகிறேன். நன்ருக நடித்தால் வெற்றி உனக்குத்தான். மற்றவை பின்னல்.

இப்படிக்கு,
உன் சகோதரன் சீனு.

குறிப்பு:— நீ ஏதோ மாலை வாங்கியிருப்பதாக உன் மாமியார் யாரிடமோ சொல்லிவிட்டாளாம். அதுமாதிரி தனக்கும் வேண்டுமென்று உன் மதனி நீலு நீலித்தனம் செய்கிருள்.

* * * *

இக்கடிதத்தைப் படித்த சாருமதிக்கு அண்ணுவின்மேல் கோபம் கோபமாக வந்தது. எழுதியிருந்த விஷயத்தை விட்டுவிட்டு என்ன என்னவோ எழுதியிருக்கிருர்களே. தன் மேல் உண்மையாகவே அன்பிருந்தால் தான் எழுதியிருந்த விஷயத்தில் இவ்வளவு அலக்ஷியமாக இருக்கமுடியுமா? என்ன இருந்தாலும் மாமியார் தானே ஓசத்தியாகிவிட்டாள். இதை நினைக்கும்போது சாருமதிக்கு துக்கம் பொங்கி வந்தது. விஷயம் வேருென்றுமில்லை.

ஒரு வாரத்திற்குமுன் சாருமதி கணவனுடன் கடைத்தெருப் பக்கம் போயிருந்தாள். அங்கு ஒரு கடையில் வைத்திருந்த மாங்காய் மாலை சாருவின் திருஷ்டியில் விழுந்தது. தன்னுடைய ஆசையை கணவனுக்குத் தெரிவித்தாள். கமலநாதனும் முன்பின் யோசியாமல் அந்த மாலையை வாங்கிக் கொடுத்து அவள் விருப்பத்தை நிறைவேற்றிவிட்டான். ஆனல் அது தவறு என்பது வீட்டிற்கு வந்த பின்னர்தான் உணர முடிந்தது.

மாலையைக் கையில் வாங்கிப் பார்த்த அவன் தாயார் ஜானம்மாள், 'ஒன்றுதான் வாங்கி வந்தாயோ' என்று கேட்டாள்.

'ஒன்றில்லாமல் பின்னே ஐந்தா வாங்கச் சொல்லுகிருய் அம்மா' என்று பரிகாசமாய் சிரித்தான்.

அவள் கேள்வியின் அர்த்தத்தை அவன் அறியவில்லை. 'அவளுக்கும் இதுமாதிரி ஒன்று வாங்க வேண்டுமென்று தோன்றவில்லை உனக்கு?'

அப்பொழுதுதான் அவனுடைய தவறை உணர முடிந்தது: 'அவள்' என்று குறிப்பிட்டது வேறு யாருமில்லை. கோயம்புத்தூரில் குடித்தனம் செய்யும் அவன் தங்கை நீலுவைத்தான். சாருமதியின் அண்ணன் மனைவி நீலுவும் சாக்ஷாத் அவளேதான். 'கட்டின புருஷன் வாங்கிப்போடறத்துக்கு துப்பில்லாமல் இருக்கும்போது மற்றவர்களைச் சொல்லிக் குற்றமென்ன?' நீண்ட பெருமூச்சுடனே எழுந்த வார்த்தையின் கொடுமையை சகித்துக்கொண்டிருக்கும் பொறுமை சாருமதிக்கு இல்லை.

'இத்தனை ரூபாய் கொடுத்து வாங்க அண்ணுச்சி பணத்திற்கு எங்கே போவார்கள். அவர்களுடைய சம்பாத்தியம் மொத்தமாய் பணம் போட எப்படி முடியும்?'

ரத்த பாசத்திலெழுந்த வார்த்தைகள் தன்னையுமீறி வெளி வந்தன. 'இந்த வெறும் ஜம்பத்திலெல்லாம் கொறச்சலில்லை. காரியத்தில் ஒன்றுமில்லாவிட்டாலும் அண்ணனுக்கு சிபார்சுக்கு வந்துவிட்டாள் சிபார்சு......மேலே போய்க்கொண்டிருந்தது வார்த்தைகள். என்ன என்னவோ இன்னும் திட்டிக்கொண்டிருந்தாள் ஜானம்மாள்.

ஜானம்மாள் நினைத்திருந்தால் மகளுக்கு இதுமாதிரி ஒரு மாலையல்ல', பத்து மாலை வேண்டுமானலும் போட்டுவிடுவாள். கையில் பணமில்லாமலுமில்லை. கால் காசோடு அரைகாசாகச் சேர்த்து மகளுக்கு எந்த விதத்தில் சேர்க்கலாம் என்ற யோசனையிலேயே ஜானம்மாள் பொழுது கழிகிறதென்ருலும் அதிசயமொன்றுமில்லை. ஆனலும் மகன் தன் மனைவிக்கு வாங்கிப்போடுவதுபோல் மகளுக்கும் அவள் கணவன் ஏன் வாங்கிப் போடக்கூடாது என்பதுதான் ஜானம்மாளின் கட்சி. நீலுவுக்கு ஒன்றும் வாங்கிக்கொடுக்கக் கூடாதென்ற நினைப்பு சீனுவுக்குக் கிடையவே கிடையாது. ஆனல் கடவுள் அவன் எண்ணமறிந்து நிறைய சம்பளத்தைக் கொடுக்கவில்லை, அது யாருடைய தவறு?

சீனுவும் கமலநாதனும் மைத்துனர்களாக ஆகும்பொழுது அவர்களிருவருக்கும் சம்பளம் ரூபாய் 40 தான். ஆனல் சாருவின் அதிர்ஷ்டம் கமலநாதன் வேலை பார்த்த கம்பெனிக்கு நல்ல லாபம் கிடைக்கவே, விறு விறுவென சம்பளம் ஏறிவிட்டது. தற்சமயம் அவன் வாங்குவது 200 ரூபாய். சீனுவுக்கும் சம்பள பிரமோஷன் ஆகாமலில்லை. அவர்கள் ஆபீஸ் விதிதப்படி இதுவரை பத்து ரூபாய் கூடியிருந்தது.

50 ரூபாய் சம்பளத்தில் நீலு கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்து அவளைத் திருப்திபடுத்த முடியவில்லை. இதுவே அவர்களுடைய சண்டைக்கு மூல காரணம்.

மகள் குடும்பத்தில் சண்டையும் சச்சரவுமாக இருக்க மருமகள் மட்டும் ஒற்றுமையாக வாழ்வதைக் காண ஜானம்மாளுக்குப் பொறுக்கவில்லை. இது அவள் சாருமதியுடன் அடிக்கடி சண்டை போடுவதற்குக் காரணமாக இருந்தது.

காரணமில்லாமலே பொருமிக்கொண்டிருக்கும் ஜானம்மாளுக்கு சாரு மாங்காய் மாலை வாங்கியது பேசுவதற்கு விஷயம் கிடைத்துவிட்டது.

ஜானம்மாளின் பேச்சு பொறுக்கமாட்டாமல் அந்த மாலையை ஏன் வாங்கினேமென்று தனிமையில் ஒரு மூச்சு அழுது தீர்த்தாள் சாருமதி. அப்பொழுதும் அவள் மனம் சாந்தியடையவில்லை. அண்ணுச்சிக்கு எழுதியாவது ஆறுதல் அடையலாமென்ற எண்ணமே அவனுக்குக் கடிதமெழுதத் தூண்டியது. அதற்கு வந்த பதில் கடிதம்தான் ஆரம்பத்தில் காண்பது.

கடிதத்தை மேஜை டிராயரின் அடியில் மறைத்து வைத்தாள். குறிப்பு என்று சீனு எழுதியதை கமலநாதன் பார்த்தால் கோபப்படுவானென்பது தெரியும். என்ன தானிருந்தாலும் நீலு அவன் தங்கையலலவா ?

ஒருவாரமிருக்கும். தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்துச் சென்ருன். கையில் வாங்கிய ஜானம்மாள், இது யார் எழுதியிருக்கிருர்கள். வாசித்துப்பார் சாரு. கையெழுத்தைப் பார்த்தால் நீலுவுடையது மாதிரி இருக்கிறதே என்ருள்.

மாமியாரின் உத்திரவின்படியே கடிதத்தை உடைத்தாள். அம்மாவுக்கு நமஸ்காரம்,

உடம்பு அசௌக்கியம்; உடனே புறப்பட்டு வரவும்.

நீலு.

என்று எழுதி இருந்தது.

அவ்வளவுதான். சாரு வாசித்து முடிப்பதற்குள் ஜானம்மாள் ஒப்பாரிவைத்து அழ ஆரம்பித்துவிட்டாள. அழுகை, அழுகையாக ஒருபுறமிருக்க எவ்வளவு சாமான் கொண்டு சேர்க்க இயலுமோ, அதை எடுத்து மூட்டையாகக் கட்டித் தயாராக வைத்துவிட்டாள். மகன் ஆபீஸிலிருந்து வந்ததும் புறப்படும் ஏற்பாட்டுடன் தயாராக இருந்தாள்.

கொஞ்ச நாட்களாவது நிம்மதியாக இருக்கலாமென்ற சந்தோஷத்தில் கமலநாதனும் பதில் பேசாமல் ரயிலேற்றி விட்டான்.

ஜானம்மாள் ஊருக்குப் போய் பத்துப் பதினைந்து நாட்களாகியும் ஊரிலிருந்து ஒரு தபாலும் வரவில்லை. கமலநாதன் எழுதிய இரண்டு மூன்று கடிதங்களுக்கும் பதிலேயில்லை. அது அவனுக்கு விசாரமாகவே இருந்தது. ஆனலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.

மனதில் வைத்துக் கொள்ள மாட்டாத சாருமதி, 'இந்த அண்ணுச்சி என்ன ஒரு கடிதம் கூட எழுதாமலிருந்து விட்டார்கள்...மதனிக்கு உடம்பு எப்படியிருக்கிறதோ'?

'உன் அண்ணுச்சியின் கெட்டிக்காரத்தனத்தை வெளியில் சொல்லிவிடாதே'

பாவம். அவர்கள் வேலைத் தொந்தரவென்னவோ?

நீதான் மெச்சிக்கொள்ளவேண்டும் உன் அண்ணுச்சியை.

ஆபீஸிற்குப் புறப்படத் தயாராஞன்.

வண்டி வந்து நிற்பதுபோல் சத்தம் கேட்டு தெருவை எட்டிப் பார்த்தாள் சாரு. மாமியாரும் மதனியும் வண்டியிலிருந்து இறங்கி வந்தார்கள். திடீரென்று வந்து நின்ற அம்மாவையும், தங்கையையும் கண்டு திகைப்படைந்துவிட்டான். ஏதோ நடந்திருக்குமென்று ஊகித்துக் கொண்ட கமலநாதன் அப்புறம் எல்லாம் சாவகாசமாய் பேசிக்கொள்ளலாம், நான் வருகிறேன் நேரமாகிவிட்டதம்மா என்று கூறியபடியே ஆபீஸிற்குப் போய் விட்டான்.

மதனி வாருங்கள். இப்பொழுது உடம்பு எப்படி இருக்கிறதென்று கேட்ட சாருவுக்கு உடம்புக்கு ஒன்றும் குறைச்சலில்லை என்று வெடுக்கென பதிலளித்தாள் நீலு.

அவசியந்தான் !



"......டேய் ! அந்தப் பழி யாருடா ? ஷோக்கா தாஜா பண்ணி அவனை கையிலே போட்டு வைச்சிருக்கயே......சினிமாக்கெல்லாம் அழைச்சிண்டு போரே......யார்ரா அது ?......"

"அவனு ! நான் சாப்பிடற ஹோட்டலில் 'ஸர்வர்'ரா அவன்......!"

அதன்பின் அவர்கள் இருவரும் பேசவில்லை.

மாலை. மாடியிலிருக்கும் கணவனுக்கு காப்பியை எடுத்துச் சென்ருள் சாரு.

கோபத்துடன் காப்பி டம்ளரை கையில் வாங்கிய கமலநாதன், வர வர உன் அண்ணனுக்கு மூளை கொழுந்து விட்டு எரிகிறதே, இதற்குச் சரியான பாடம் கற்பிக்கத் தெரியாதென்று நினைத்துக் கொண்டாரோ. அவர் செய்தது போல் உன்னையும் ஊருக்கு அடித்துத் துரத்தி பழிக்குப்பழி வாங்கினல்தான் புத்தி வரும்...'

"எங்கே என்னைப் பார்த்து, இன்னெரு தரம் அப்படிச் சொல்லுங்கள். ஊருக்கு அடித்துத் துரத்தி விடுவதற்கு நான் என்ன தவறு செய்துவிட்டேனும்!"

'நீ தவறு செய்யவில்லை என்ருலும் உன் அண்ணனின் குற்றத்திற்காக அப்படித்தான் செய்ய வேண்டும்'

'உங்கள் தங்கை சரியாக நடந்து கொண்டால் என் அண்ணு மட்டும் எப்படி தவறு செய்ய முடியும்?'

கமலநாதன் தலை கவிழ்ந்தான். அவனல் பதில் பேச முடியவில்லை. உண்மையை எடுத்துச் சொல்லிய சாருவிடம் எப்படி பதில் பேச முடியும்?

பழிக்குப்பழியாக சாருவைத் துரத்தி விடுவான் என்று எதிர்பார்த்திருந்த தாயும் மகளும் ஏமாற்றமடைந்தனர். நீலு வந்து ஒரு வாரமாகியும் அது மாதிரி ஒன்றும் நடக்கவில்லை. மகள் வாழா வெட்டியாக வந்திருக்கும் போது மருமகள் மட்டும் பாக்யலக்ஷ்மி மாதிரி குடித்தனம் செய்வதைக் காண ஜானம்மாளின் பொருமை நிறைந்த உள்ளத்திற்குப் பொறுக்கவில்லை. அடிக்கடி எடுத்ததெற்கெல்லாம் சச்சரவு பண்ணிக்கொண்டேயிருந்தாள்.

ஒருநாள் காரணமில்லாமலே சண்டை போட்டுக் கொண்டு மகளும், தானும் தனிக் குடித்தனம் செய்யப் போவதாக கிளம்

பியேவிட்டாள். கமலநாதன் அம்மாவின் செய்கைக்காக மிகவும் மனம் வருந்தினான். அவள் தனிக் குடித்தனம் செய்வதால் தன்னைப் பற்றிப் பிறர் அவதூறாகப் பேசுவார்களே என்று அவன் கவலைப்படவில்லை. ஆனால் தாயின் துர்போதனையினால் கெட்டுக் 'குட்டிச் சுவராகும் தன் தங்கைக்காகவே மனம் புழுங்கினான், அந்தப் புத்தி நீலுக்கல்லவா இருக்க வேண்டும்?'

அன்று தை வெள்ளிக்கிழமை. ஆபிஸிலிருந்து வந்த கமலநாதன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து ஏதோ பேப்பர் படித்துக்கொண்டிருந்தான். விளக்கடி மெழுகிக் கோலமிட்டுக்கொண்டிருந்தாள் சாரு. கோலத்தை முடித்துவிட்டு தலை நிமிர்ந்த சாருவுக்கு அவள் கணவன் அவளையே உற்று நோக்குவது லஜ்ஜையாக இருந்தது.

'பேப்பர் படிப்பதை நிறுத்திவிட்டு அப்படி பார்க்கிறீர்களே என்ன விசேஷம்'! சாரு கேட்ட பின்னர் தன் பார்வையை வேறு பக்கம் செலுத்த முயற்சித்தான்.

'இருந்தாலும் நீ ஒரு வகையில் கெட்டிக்காரிதான்' அவன் வாய் முணு முணுத்தது.

கணவன் தன்னைப்பற்றி புகழ்வதைக் கேட்டு சந்தோஷம் ஒரு புறமும் பரிகாசம் செய்கிறாரோ என்ற சந்தேகமும் தோன்ற.

'என்ன கெட்டிக்காரத்தனத்தைக் கண்டுவிட்டேளாம்' என்ற வார்த்தையை இழுத்தாற்போல் கேட்டாள்.

"இப்பொழுது நீ உன் அண்ணாவின் வீட்டில் இருக்க வேண்டியவள். உன்னுடைய வாய் சாமர்த்தியத்தினால் இங்கு இருக்கிறாய்"

"வாய் சாமர்த்தியத்தினால் இங்கு இருக்கிறேனா அல்லது உலக நியாயத்தின் முன்......"

இது தான் உலக நியாயம் என்பதுபோல் ஜானம்மாள் வந்து சேர்ந்தாள். அந்த சமயத்தில் அவள் அங்கு வருவாள் என்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை.

வந்து நின்ற ஜானம்மாளை திகைப்படைந்த இருவரும் ஏக காலத்தில் நமஸ்கரித்தெழுந்தனர்.

நீலு எங்கே அம்மா என்று கேட்டதற்கு மாப்பிள்ளை வந்து அழைத்துப் போய்விட்டார்கள் என்று ஒரு வார்த்தையில் பதிலளித்துவிட்டு, வழக்கமான பின்கட்டுத் தாழ்வாரத்தில் போய் படுத்துக்கொண்டாள்.

தண்ணீர் இறைக்க வந்த அடுத்து வீட்டு அலமேலு அக்காவுக்கு ஜானம்மாவின் வரவு அதிசயமாக இருந்தது.

என்ன அக்கா கடைசியில் வந்து சேர்ந்து விட்டாயா? என்று வியப்புடன் கேட்டாள்.

ஆமாம். அதுகளுக்கு நம்மை விட்டால் கதி யார்? நமக்கும்தான் அவர்களை விட்டால் கதியேது?" என்று சொல்லிக்கொண்டாள்.

'எங்கு சுற்றியும் ரங்கரைத் தான் சேவிக்க வேண்டும்' என்று அலமேலு அக்கா சொல்லிக் கொண்டு போனது, முன் பக்கம் நின்ற கமலநாதன் தம்பதிகளுக்கு கேட்காமலில்லை.

மனைவியை அழைத்துப்போகிற அவசரத்தில் உன்னைக் கூடப் பார்க்க வரவில்லையே உங்க அண்ணா என்று கமலநாதன் பரிகாசம் செய்தான்.

அவன் சொல்லியது பரிகாசமாகச் சொன்னாலும் சாருவுக்கு அவன் சொன்ன விஷயம் வருத்தமளிக்கத்தான் செய்தது.

ஜானம்பாள் சொல்ல மறைத்த விஷயங்களை மறுநாள் வந்த சீனுவின் கடிதம் விளக்கியது.

ஜானம்மாளும், நீலுவும் தனிக் குடித்தனம் ஆரம்பித்த சில நாட்களிலேயே நீலுவுக்கு அந்த வாழ்க்கையில் வெறுப்பேற்பட்டுவிட்டது. தன்னையொத்த பெண்களெல்லாம் இப்படித்தான் வாழ்கிறார்களா? தான் மட்டும் இப்படி தனிமை வாழ்வு ஏன் வாழவேண்டும்? அவள் கணவன் சீனு அவளிடம் அன்பில்லாமலிருந்தானா? இல்லையே. நீலு என்றால் அவளுக்காக உயிரைக்கூட விடுகிறவனாச்சே. பின் ஏன் இந்த வாழ்வு? அதற்கெல்லாம் காரணம் யார்? நினைக்க நினைக்க அவளுக்கு அம்மாவின் மேல்தான் கோபம் ஏற்பட்டது. தன்னை வந்து அழைத்துப் போகும்படி கணவனுக்குக் கடிதமெழுதலாமா என்றுகூட நினைத்தாள்.

ஆனாலும் பெண்மையின் கௌரவம் குறுக்கே நின்று அவளை எழுத விடவில்லை.

ஒருவேளை இப்படியே வராமலே இருந்து விடுவாரோ என்று நினைக்கும்பொழுது நெஞ்சம் திக்கென்றது. பலவித ஏக்கத்துடனே எப்படியோ நாட்களைத் கழித்து வந்தாள்.

காலைந்து மாதங்களுக்குப் பின் ஒருநாள் வந்து நின்ற சீனுவுடன் அவன் அழைக்கு முன்னரே ஊருக்குப் புறப்பட்டு விட்டாள்.

சண்டை சச்சரவில்லாமல் என் சொல்லைக் கேட்டு மரியாதையாகக் குடித்தனம் செய்வதென்றால் மீட்டும் என்னுடன் வா. இல்லை உன் அம்மாவின் பேச்சை கேட்டுக்கொண்டிருப்பதானால் இங்கேயே இரு, என்றென்றும் உன் இஷ்டம் போலவே இரு, என்று கேட்ட கணவனுடன் பதில் பேசாமல் புறப்பட்டுவிட்டாள். இந்த விவரமெல்லாம் சீனு கடிதத்திலிருந்து தெரிந்துகொண்டாள். போகிற அவசரத்தில் தங்கையின் வீட்டிற்கு வராமல் போனதற்கு மன்னிப்புக்கோரி எழுதியதைப் பார்த்த பின்னரே சாருவின் மனம் நிம்மதியடைந்தது. கடிதத்தின் முடிவில், 'நான் நடித்த நாடகம் எப்படி?' இதில் வெற்றி யாருக்கு? உனக்கா? எனக்கா? என்று எழுதியிருந்தது. கடிதத்தை வாங்கிப் படித்த கமலநாதன் வெற்றி உங்கள் இருவருக்குமே என்று கூறி முடித்தான்.

கும்பகோணம் ஷராப் வர்த்தகர் ஸ்ரீமான் ஏ. ஆர். விச்வநாதன் செட்டியாரின் குமாரன் சி. ஏ. வி. சத்திய நாராயணனுக்கும், சென்னை ஸ்ரீ வேங்கடேசப்பெருமாள் செட்டியார் குமாரத்தி சௌ. அனுஸூயாவுக்கும் சமீபத்தில் சிறப்பாக விவாஹம் நடந்தது.

பட்டுப் புடவைகள்.

கொள்ளேகால், பெங்களூர், பெங்கால், பெனாரஸ் சேலைகள் எல்லா ஊர் பட்டு, ஜினுசுகளும் இங்கு இதர கடைகளைக் காட்டிலும், ரூ. 10 முதல் ரூ. 25 வரை குறைவாக இருக்கும்.

நேரில் விஜயம் செய்யுங்கள்.

ஸ்ரீ சாரதாள் ஸில்க் ஷாப்
37, தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

T. V. S. இராஜகோபால அய்யர், ஸோல் புரோப்ரைட்டர்.

KARNIK BROS' BOMBAY 4.

டாக்டர்
கே. வி. மாத்யூ அவர்களுடைய புத்தகங்கள்
—☆—

(1) மலடும் அதன் நிவாரணமும் ரூ. 3.

"ஆணிலும் பெண்ணிலும் மலடு ஏற்படும் காரணங்களை டாக்டர் மாத்யூ இப்புத்தகத்தில் விவரித்து, அவைகளை எவ்வகையில் நீக்கலாம் என்று கூறுகிறார்".

—The Hindu.

(2) இளமை பெறும் முறை ரூ. 3.

ஆண், பெண்ணைப்பற்றி மிகவும் நுட்பமான விஷயங்களில் இதைச் சாதாரண தெளிவான முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. விருத்தாப்பியத்தினால் பீடிக்கப்படும் எல்லோருக்கும் இப்புத்தகம் அனுபவ பூர்வமான சமய சஞ்சீவியாயிருக்கிறது.

—Morning Star

☆

ஹெல்த் புத்தகசாலை,
7/8, கிருஷ்ணன் கோயில் தெரு
ஜி. டி., மதராஸ்.

முன் பணம் அனுப்பினால் தபால் சார்ஜ் இனம்.

REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA.
(GOVT. REGD)

இது சித்த வசீகரண யந்திரம். இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர். நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத்தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை		ரூ. 2.
வெள்ளி	,,	ரூ. 3.
தங்கம்	,,	ரூ. 10.

★

SREE
KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P. O. Katrisarai. (Gaya)

Rgd. No. 2221.

27 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Porp: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம். **S.I.R.**

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசிகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.



காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில், ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.

மாதவிடாய்

நின்றுவிட்டால் எக்காரணத்தினால் ஆனாலும் ரீதுபிரயர்தினி கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட் ஒரே நாளில் ஹானியில்லாமல் வெளிப்படுத்தும். ரூ. 3. **பர்பதி** கர்ப்பத் தடைக்குச் சிறந்தது. தாற்காலீகம் ரூ. 2. நிரந்தரம் ரூ. 4-8-0. வி. பி. அணா 13.

இம்மருந்துகள் கிடைக்குமிடம்:—

அப்பா & கம்பெனி
286, சைனாபஜார், மதராஸ்

★

விரை வீக்கம்

ஹர்னியா, யானைக்கால், முடக்கு வாதம் முதலியவற்றை எளிதில் குணமாக்குவது **பிஷிஹா தைலம்.** தடிப்பு, வலி, வீக்கம், விரைவில் மாயமாய் மறையும் ரூ. 3. உள் மருந்து ரூ. 2. வி. பி. அணா 13.

★

குஷ்டம், வெண் குஷ்டம்

உள்ளுக்கும் வெளிப் பூச்சுக்கும் மருந்துகள்:—

உத்தரவாதமான சிகிச்சை.

ஒருமாத மருந்து ரூ. 24-13.

★

விகரின் (தங்கம், கஸ்தூரி, மகரத்வஜம் சேர்ந்தது)

இளமையும், ஜீவ சக்தியும் அளித்து, ஞாபக மின்மை, ஹிருதய பலவீனம், நரம்புத் தளர்ச்சி இவற்றை குணமாக்கும். புதிய ரத்தம் ஊறி தேக திடம் அளிக்கும். விலை ரூ. 3. சக்தி வாய்ந்தது ரூ. 10. வி. பி. செலவு அணா 12.

Kaviraj R. Chakravorty,
Ayurveda Sastri (S. W.)
Bhowanipore, Calcutta. 25

பெண்களின் பொக்கிஷம்!

மோஹனா கூந்தல் தைலம்

வைத்திய சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது. ஜீவசக்தி வாய்ந்த கூந்தல் தைலம் அழகான கேசத்தை பட்டுப்போல் மிருதுவாக, நீண்டு வளரச் செய்கிறது.

இன்றே உபயோகித்து திருப்தி அடையுங்கள்.

விலை ரூ. 1—4—0 : : கேட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால் (REGD)

189, வக்கீல் புது தெரு, — **Post Box No. 27** — மதுரை.
H. O. TRIVANDRUM
பிராஞ்சுகள் :—
207, நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம்.
20, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, G. T. மதராஸ்.
58E, தர்மராஜா கோவில் வீதி, பெங்களூர், தண்டு.
179, SEA STREET, COLOMBO.

சாஸ்வதமான யௌவனத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கி, புதிய இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், இல்லற இன்பத்தையும் தரும். 40-நாள் மருந்து ரூபாய் 3-12-0, வி.பி. செலவு வேறு.

ஜமதக்னி ஔஷதாலயா,
26, வடக்கு மாடவீதி
மயிலாப்பூர் : : சென்னை.

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. டி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. "விவாகப் பொருத்தங்கள்" புத்தகம் விலை ரூ. 1. "வாழ்க்கையில் வெற்றி" என்னும் புத்தகம் விலை அணா 6, வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், தேனாம்பேட்டை போஸ்டு, மதராஸ்.

மாதவிடாய் நின்று விட்டதா? எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சுலபமாகவும் ஹானியின்றியும் 24-மணியில் வெளிப்படுத்தும். "சம்பகிரேசனி" உத்தரவாதமானது. 30 வருஷம் புகழ்பெற்றது. கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர்ட் விலை ரூ. 4—4—0 தபாற் செலவு அணா 12.

கர்ப்பத்தடை நீங்கள் விரும்பிய விதம் கர்ப்பத்தடை செய்ய "தம்பதி சாகா" சிறந்த மருந்து. ஹானியற்றது. நிரந்தரம் ரூ. 4—4—0 தாற்காலிகம் ரூ. 2—0—0 தபாற் செலவு அணா 12 தனி.

ஆண்மை "மதன் விலாஸ ரஸாயனா" அற்புத மருந்து வீர்யமின்மை, நரம்புத் தளர்ச்சி, பசியின்மை கீல் வாயு, இருமல் முதலியவை ஒரே வாரத்தில் குணமாகும். வாழ்க்கையை நன்கு அனுபவிக்கலாம். ரூ. 2—8—0 தபாற் செலவு அணா 12.

Kaviraj M. Kavyatirtha (S. W.)
70, Cornwallis Street, Calcutta 6.
Stockist: Milton & Miller, 157, Broadway, Madras.

அனைவருக்கும் திருப்தி யளிக்கக்கூடிய எல்லாவிதமான

நவீன பட்டு & நூல் ஜவுளி ரகங்களுக்கு

மாருதி கிளாத் மார்ட்
14, ராஜவீதி ★ கோயமுத்தூர்

டெலிபோன் 2240 தந்தி : கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் M. முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும் உயர்தர மான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாக விளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்
ஸ்பேட் கிளாவர் & ஆர்டீன் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்,



எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்ட்ரோல் விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

M. R. பார்த்தசாரதி ஐயங்கார்,
28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு'
திருவல்லிக்கேணி,
மதராஸ்.

கேஸரி குடீரம் லிட்.,
மதராஸ்.

★

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏஜண்டுகள் :

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பர்ஹாம்பூர் - செகந்திராபாத்
பெஜவாடா - மதுரை.

நீரிழிவு! இன்று முதல் புகழ்பெற்ற

ஸோம மஹாந்தக் உபயோகித்து பூரண சுகம் பெறுங்கள். சிறுநீர் கனத்தை ஒழித்து சர்க்கரை, அல்புமன் இல்லாமல் செய்து உடம்பைத் தேற்றுகிறது. யாதொரு இஞ்சக்ஷனும் இன்றி எல்லாவிதமான நீரிழிவு நோய்களையும் சீக்கிரமாகவும் நிரந்தரமாகவும் குணமாக்கும். கவலையை ஒழித்து உடனே உபயோகித்துப்பாருங்கள். 15 நாள் மருந்து விலை ரூ. 5-8-0. தபால் செலவு அணா 12.

தாது புஷ்டிக்கு அமிருதர் நாப்

புகழ்பெற்ற டானிக் உடம்புக்கும், மூளைக்கும் சிறந்தது. ஏழே நாட்களில் அபூர்வ பலன் எல்லாவிதமான நரம்புத் தளர்ச்சி பலஹீனம் மயக்கம் பசியின்மை தூக்கமின்மை முதலியவை. குணமாகும். 15 நாள் மருந்து ரூ. 4. வி. பி. அணா 12,

மாதவிடாய் நின்று விட்டதா ? கவலை வேண்டாம்

சாஸ்திரீகமுறை தவறிய அபாயகரமான மருந்துகளை உபயோகிக்காதீர். புகழ்பெற்ற கவர்ன்மெண்டு ரிஜிஸ்டர் ராஜ நியமோனி ஒரே தினத்தில் போக்களிக்கும். தீங்கற்றது. கடுமையானதற்கும் சிறந்த ஔஷதம். விலை ரூ. 3-8-0, ஸ்பெஷல் ராஜ நியமோனி நாள்பட்ட கேஸ்களுக்கு மட்டும் விலை ரூ. 10. உத்தரவாதம் பெற்றது. தபால் செலவு அணா 12. ரோதுணி கர்ப்பத்தடைக்கு சிறந்த தீங்கற்ற மருந்து. மாதவிடாய் ஒழுங்காயிருக்கும் நிரந்தரம் ரூ. 5. தற்காலிகம் ரூ. 2-8-0 தபால் செலவு அணா 12. கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும். மற்ற விவரங்கள் விண்ணப்பத்தின் பேரில் கிடைக்கும், வெளியூர் ஆர்டர்களுடன் முழு பணம் அனுப்பப்படவேண்டும்.

Kaviraj M. BHATTACHARYA (S. A.)
Kavya-Vyakarantirta, Vishagacharya,
120/1/1, UPPER CIRCULAR ROAD, CALCUTTA 9.

ஸ்ரீமத் பகவத் கீதை

விலை ரூ. 3—8—0
(தபால் செலவு பிரத்யேகம்)
மானேஜர், "சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.